தரம் 5 – 11 வரை

AHARAM


# அகரம்

எண்: 05 எழுத்து: 11

நவம்பர் 2011



## பரீட்சை என்பது பாடத்திட்டத்தின் இலக்குகளைப் பரீட்சிப்பது



## ஸ்டீவ் ஜொப்ஸ்:


## ஒரு ஜீனியஸின் வாழ்க்கைக் குறிப்பு

30/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாவனல்லை பதுரிய்யா மத்திய கல்லூரில் இவ்வருடம் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 31 மாணவர்கள் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




PUBLIC LIBRARY
JAFFNA

அகரம்

எண்: 05 நவம்பர்: 2011 எழுத்து: 11

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.எம். பவாஸ்

**சந்தா விபரம்**
**1 வருட சந்தா 550 /-**
**6 மாத சந்தா 275 /-**

**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*

## உள்ளே...

**ஸ்டீவ் ஜொப்ஸ்**
**ஒரு ஜீனியஸின்**
**வாழ்க்கைக் குறிப்பு** 24






11




13

### நேர்காணல்



18
எம்.எச்.எம். ஹஸன் (M.Ed)



32
பாத்திமா நிப்ரா



33
ஏ.எஸ். பாத்திமா அம்னா



36
ரமேஷ் நிதூஷிகா

அல்பத்தானி 39




07




38

### பாடத்திட்டம்



| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 22 | புலமைப் பரிசில் | 40 |
| வரலாறு | 16 | தமிழ் | 27 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுடன் ஆசிரியர்

***பாடசாலை*** சூழலும் வாழ்வும் இனிமையானவை; மறவாத நினைவுகளைக் கொண்டவை. அங்கு நிகழும் அனைத்தும் இனிமையானவையே. கசப்பாக இருந்தவையும் கூட பிற்காலத்தில் நினைவுக்கு இனிமையாவது உண்டு. அங்கு கழியும் ஒவ்வொரு பொழுதும் பெறுமதி வாய்ந்தது. ஆற்றல், திறன், ஆளுமை வளர்ச்சி என்பவற்றுக்கு பெரும் பங்காற்றுவது. மாணவர்கள் பாடசாலைக் காலத்தைப் பயன்படுத்துவதில் கவனம் கொள்ள வேண்டும் என ஆரம்பமாக சொல்ல விரும்புகின்றோம்.

தம்பி தங்கைகளே!

உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் சகபாடிகளைப் பாருங்கள். உங்கள் வகுப்பறையை ஒரு முறை இல்லை... பல முறை நோட்டமிட்டுப் பாருங்கள். வறுமையோடு போராடும் எத்தனை பேர் அமர்ந்திருக்கிறார்கள்? காலை உணவைக் கூட தேவையானளவு உண்ண முடியாத அளவிற்கு வறுமையால் போராடும் வகுப்புத் தோழமைகள், அதன் சுவடுகளை மறைக்கும் பிரயத்தனத்தோடு உங்களுக்கருகில் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் இன்னும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை; அவர்களது தேவையை நீங்கள் அறியவில்லை. அதன் விளைவாக நீங்கள் பிறருக்கு உதவுபவர்களாக இல்லை. பாடசாலைக்கு சமுகமளிக்கும் மொத்த மாணவர்களில் குறைந்த பட்சம் 40-45 வீதமானவர்கள் வறுமையோடு போராடுகின்றவர்கள் (ஆய்வு ரீதியானதல்ல) என்பதை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியுமாக உள்ளது. பலர் பசியோடு போராடும்போது நாம் மட்டும் வயிறாரப் புசிப்பது தர்மமாகுமா! அது மனிதத்துவமா!! ஈமானின் அடையாளமாகுமா!!!

ஒரு மனிதன் பசித்திருப்பது என்பதை அல்லாஹ் தான் பசித்திருப்பதாகவே கருதுகின்றான். அவரது பசியைப் போக்க உதவாததை தனது பசியைத் தீர்த்து வைக்காததாகவே கருதுகின்றான். ஓர் ஊரில் ஒருவர் பசியோடு ஒரு பொழுதைக் கழித்தால் அவ்வூரின் பாதுகாப்பை அல்லாஹ் எடுத்து விடுகின்றான்.

பிள்ளைகளே! இதுவெல்லாம் பெரியவர்களுக்கு மட்டுமல்ல. பெரியவர்களானால் கவனிக்க வேண்டிய விடயமுமல்ல. இப்போதிலிருந்தே தேவையுடையோருக்கு உதவுகின்ற உளப்பாங்கை வளர்ப்பதற்கான பயிற்சி பெற வேண்டும். நாமே நமது சூழலில் வாழ்வோருக்கு உதவ முன்வர வேண்டும். அப்போது அல்லாஹ்வின் அருளை நாம் பெற முடியும்.

எமது வகுப்புத் தோழர்களுக்கு உதவுவதற்கான சாத்தியமான ஒரு வழிகாட்டல் முன்மொழிவை முன்வைக்கின்றோம். முயற்சித்துப் பாருங்கள், நிச்சயமாக வெற்றியீட்டுவீர்கள்!

ஆயிரம் மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலையில் குறைந்த பட்சம் 500 மாணவர்கள் சராசரியாக நாளாந்தம் 40 ரூபா கைக் காசு (Pocket Money) எடுத்து வருவார்கள். குறித்த 500 மாணவர்களும் ஒரு நாளைக்கு 5 ரூபா வறிய மாணவத் தோழர்களது தேவையை நிறைவு செய்ய வழங்க முன் வருவார்களாயின்...! சிந்தித்துப் பாருங்கள்.

500 x 5 x 20 நாட்கள் =50, 000 இது மாதாந்தம் சேமிக்கப்படும் தொகை. பாடசாலை சராசரியாக 200 நாட்கள் நடைபெறுகின்றது எனக் கணித்தால் வருடத்தில் 5 இலட்சம் ரூபாய்கள். உங்கள் அருகில் துயரங்களோடும் வறுமையோடும் போராடிக் கொண்டிருக்கும் தோழனுக்கு எத்துணை பெரிய ஆறுதலாக இருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! தோழர்களோடு ஆசிரியர்களோடு அதிபரோடு கலந்துரையாடுங்கள்! செயல் வடிவம் கொடுங்கள்! வாழ்க்கை இனிக்கும்; அது முடிவில்லாமல் இனிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூ ஹானிம்

# எங்கள் ஆதி பிதா ஆதம்

# (அலைஹிஸ்ஸலாம்)



**அல்குர்ஆன்** கூறும் கதைகள் என்ற இந்தத் தொடரில் முதல் மனிதர் நபி ஆதம் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் படைக்கப்பட்ட வரலாற்றை ஒரு முறை மீட்டிப் பார்ப்போம்.

மனிதன் பூமியின் மூலை முடுக்கெங்கும் பரவி வாழ்கிறான். அதில் தாவரங்களையும் செடி கொடி களையும் பயிரிட்டு இப்பூமியை பசுமையாக்கு கின்றான். தன் ஆற்றலைப் பயன்படுத்தி தரையிலும் கடலிலும் அதன் கருவூலங்களைப் பெற்று அனுப விக்கின்றான். அவன் சிறப்பாக, அழகாக, கவர்ச் சியாக படைக்கப்பட்டுள்ளான். இப்புவியில் வாழும் ஏனைய படைப்பினங்களை விட அறிவு எனும் உயர்ந்த செல்வத்தை அவன் பெற்றுள்ளான்.

இப்படியாக பல சிறப்பம்சங்களைப் பெற்ற மனிதன் தனித்துவமான ஆற்றலும் உயர் ஞான மும் மிக்க படைப்பாளனாகிய அல்லாஹ்வால் படைக்கப்பட்டான். அவனது நாட்டத்தினதும் அறிவினதும் பேராற்றல் மிக்க தொழிற்பாட்டைத் தான் இப்புவியில் நாம் கண்டுகொண்டிருக்கின் றோம்.

அல்லாஹ் தனது பிரதிநிதியை பூமியில் படைக்க நாடினான். தனக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு வழிப்படுகின்ற ஒளியால் படைக்கப்பட்ட வானவர்களிடம் அதனைத் தெரிவித்தான். மலக்குகள் அல்லாஹ்வை துதிப்பதிலும் அவன் புகழை உரைப்பதிலும் சற்றும் குறை செய்யாத வர்கள். இவ்வுரையாடலை அல்குர்ஆன் பின்வரு மாறு கூறுகிறது:

"(நபியே) உமதிறைவன் வானவர்களை நோக்கி நிச்சயமாக நான் பூமியில் (என்னுடைய) பிரதி நிதியைப் படைக்கப் போகின்றேன் என்று கூறிய நிகழ்வை நினைவுகூர்வீராக.

அச்சமயத்தில் அவ்வானவர்கள் (பூமியில்) குழப் பங்களை உருவாக்கி அழிவு செய்து இரத்தம் சிந்தக்கூடிய (மனிதப்) படைப்பினமொன்றையா நீ பூமியில் ஆக்கப் போகின்றாய் என (தமக்கு வழங் கிய அறிவின் அடிப்படையில்) வினவி, நாங்களோ உன்னுடைய பரிசுத்தத் தன்மையைக் கூறி உன் புகழ் கொண்டு உன்னைத் துதி செய்கின்றோம் என்று கூறினர்.

அப்போது அல்லாஹ் "நீங்கள் அறியாதவற் றையெல்லாம் நிச்சயமாக நான் நன்கறிவேன் என பதிலளித்து விட்டான்." (அல்பகரா: 30)

வானவர்கள் தமது பணிவான கருத்தை தம் எஜமானின் முன்னிலையில் மிகத் தாழ்மையுடன் சமர்ப்பித்தார்கள். இவ்வுரையாடலின் பின்னர் அல்லாஹ் எங்கள் அபூ ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை களிமண்ணால் படைத்தான்.

"சுடப்பட்ட பாத்திரத்தைப் போல் (தட்டினால் கண் கண் என்று) ஒலியெழுப்பும் களிமண்ணால் அவன் முதல் மனிதரைப் படைத்தான்." (அர்ரஹ்மான்: 14)

நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அல்லாஹ் படைத்ததன் பின்னர் அவருக்கு கற்றுக் கொடுத்தான்.

"பின்பு ஆதமுக்கு எல்லாப் (பொருட்களினதும் அனைத்து அறிவினதும் அடிப்படைப்) பெயர்களை யும் கற்றுக் கொடுத்தான்." (அல்பகரா: 31)

இன்று நாம் எண்ணற்ற அறிவியல் அற்புதங்க ளைப் பார்க்கின்றோம். இவை அனைத்தினதும் அடிப்படைகளை மனிதனைப் படைத்தபோதே அல்லாஹ் கற்றுக்கொடுத்து விட்டான் என்பதைத் தான் மேலுள்ள வசனம் கூறுகின்றது. அல்லாஹ் நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்ததன் பின்னர் என்ன செய்தான் தெரியுமா?

(37ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹதீஸ் பூங்காவிலிருந்து

● ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

الحديث الشريف

## ஹஜ் கிரியைகளும் படிப்பினைகளும்

عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
الْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا وَالْحَجُّ الْمَبْرُوْرُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلاَّ الْجَنَّةَ (مُتَّفَقٌ عَلَيْهِ)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு உம்ரா, அடுத்த உம்ராவுக்கு இடையிலுள்ள பாவங்களை இல்லாமல் செய்துவிடும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சுவர்க்கத்தையன்றி வேறில்லை." (அல்புகாரி, முஸ்லிம்)

**இஸ்லாத்தின்** ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான ஹஜ்ஜை அல்லாஹ் செல்வம் படைத்த முஸ்லிம்கள் மீது விதியாக்கியுள்ளான். இஸ்லாத்தின் கடமைகள் அனைத்தும் உயர்ந்த நோக்கங்களையும் பெரும் வரலாற்றுப் பின்னணியையும் கொண்டுள்ளதை நாமறிவோம். மேலும் உன்னத வாழ்க்கையை மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சியை அவை வழங்குகின்றன.

ஏகத்துவம், தக்வா, தியாகம், பொறுமை, சகோதரத்துவம் போன்ற விடயங்களையும் பெருமை, முகஸ்துதி, மமதை, போன்றவற்றிலிருந்து மனிதனை பாதுகாக்கக்கூடியதாகவும் ஹஜ்ஜில் மேற்கொள்ளப்படும் கிரியைகள் அமைந்துள்ளன. அத்தோடு ஹஜ் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது குடும்பத்தவர்களின் வாழ்க்கையையும் அவர்கள் புரிந்த தியாகத்தையும் கண் முன் கொண்டுவந்து விடுகின்றது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு அல்லாஹ் தனது உயர்ந்த அன்பளிப்பாகிய சுவர்க்கத்தை வழங்குகிறான் என நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எம்மை சுவனத்திற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஹஜ்ஜின் கதாநாயகராக விளங்கும் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்), இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் அவர்களது குடும்பத்தவர்களது வாழ்க்கையிலிருந்து சிறுவர்களாகிய எமக்கு பல படிப்பினைகளும் முன்மாதிரிகளும் இருக்கின்றன.

இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது சிறுபராயத்திலேயே தான் கொண்ட ஏகத்துவக் கொள்கையில் உறுதியாக இருந்தார்கள். அல்லாஹ்வையும் அவனது சக்தி, வல்லமைகளையும் நன்கு விளங்கிக் கொண்ட அவர்கள் இணைவைப்பாளர்களிடம் "எனது இரட்சகன் உயிர் கொடுக்கவும் மரணிக்கச் செய்யவும் கிழக்கிலிருந்து சூரியனை கொண்டுவரவும் ஆற்றல் உள்ளவன்" என துணிச்சலுடன் எடுத்துக் கூறினார்கள்.

இதனால் பல இன்னல்களையும் சோதனைகளையும் அவர்கள் சந்திக்க நேரிட்டது. எனினும், தனது உயிரை விடவும் ஓரிறைக் கொள்கையை உயர்வாக நோக்கினார்கள். தனது இரட்சகனான அல்லாஹ் இடுகின்ற கட்டளைகளை நிறைவேற்றுவதில் சற்றும் பின்வாங்கவில்லை.


இவ்வாறே அவர்களது மனைவியான ஹாஜரா அவர்களும் தனது கணவர் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு உந்துசக்தியாக இருந்தார்கள். தன்னையும் தனது குழந்தையையும் எந்த மனித சஞ்சாரமுமற்ற, உணவோ தண்ணீரோ இல்லாத இடத்தில் விட்டுச் சென்றபோது "இது அல்லாஹ்வின் கட்டளையெனில் நாம் அதனை மனப்பூர்வமாக ஏற்கின்றோம்" என்று தனது கணவருக்கு இறைகட்டளையை நிறைவேற்ற துணைநின்றார்கள். இச்செயலைக் கண்ட அல்லாஹ் அவர்களுக்கு ஸம் ஸம் நீரூற்றை ஏற்பாடு செய்து கொடுத்தான். இது அல்லாஹ் அவர்களுக்கு செய்த பெரும் அருளாகவும் பாக்கிய மாகவும் அமைந்தது.

(44ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk




# இதயம்

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

> "இதயம் உணர்கின்றது, ஞாபகிக்கின்றது. அத்தோடு வேறு ஓர் இதயத்தால் விளங்க முடியுமான எண்ண அலைகளையும் வெளியிடுகின்றது. இதயம் எவ்வாறு ஒவ்வொரு கணப்பொழுதும் உடலின் பல பாகங்களில் இருந்தும் வருகின்ற தகவல்களைப் பெற்று அவற்றை மூளைக்கும் உடலின் இதர பகுதிகளுக்கும் மின்அலை வடிவில் கடத்துவதைப் போலவே எண்ண அலைகளையும் கடத்துகின்றது. இதனை விஞ்ஞானம் Telepathy என்கின்றது."

**அமெரிக்காவைச்** சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் இதய நோய்க்குள்ளானபோது அதே சமயத்தில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு மரணித்த ஒரு குற்றவாளியின் இதயம் குறித்த தொழிலதிபருக்குப் பொருத்தப்பட்டது. சத்திர சிகிச்சை செய்யப்பட்டு சில வருடங்களிலேயே இத்தொழிலதிபரிடமிருந்து முன்பைவிட பல வித்தியாசமான நடத்தைகள் வெளிப்பட ஆரம்பித்தன. சிந்தனா ரீதியாகவும் நடத்தை ரீதியாகவும் பல மோசமான, கடுமையான குணாதிசயங்கள் அவரிடத்தில் தோன்ற ஆரம்பித்தன. இறுதியில் அவர் ஒரு குற்றவாளியாகவே மாறியமை பலரையும் ஆச்சரியப்படவும் கவலை கொள்ளவும் செய்தது.

மனிதனது இதயம் அவனது முழு உடலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதயம் சீர் கெட்டுவிடும் சந்தர்ப்பத்தில் அவனது நடத்தையிலும் பழக்க வழக்கங்களிலும் நம்பிக்கைகளிலும் மாற்றங்கள் தோன்றுகின்றன என்பதற்கு மேற்கூறிய சம்பவம் ஒன்றே போதிய சான்றாகும். இவ்வுண்மையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது பின்வரும் நபிமொழி மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

நபியவர்கள் கூறினார்கள்;

**"அறிந்து கொள்ளுங்கள்! மனிதனது உடலிலே ஒரு சதைக் கட்டி இருக்கின்றது. அது சீரடைந்தால் முழு உடலும் சீர்பெற்றுவிடும். அது சீர்கெட்டுவிட்டால் முழு உடலும் சீர்கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள் அதுதான் இதயம்." (அல்புகாரி, முஸ்லிம்)**

## இதயம் மற்றுமோர் இதயத்துடன் உறவாடுகின்றது

Heart Math என்ற தனது நூலில் டாக்டர் Pearsall இதயங்களுக்கிடையிலான உறவாடலைப் பின்வருமாறு கூறுகின்றார்:

"இதயம் உணர்கின்றது, ஞாபகிக்கின்றது. அத்தோடு வேறு ஓர் இதயத்தால் விளங்க முடியுமான எண்ண அலைகளையும் வெளியிடுகின்றது. இதயம் எவ்வாறு ஒவ்வொரு கணப்பொழுதும் உடலின் பல பாகங்களில் இருந்தும் வருகின்ற தகவல்களைப் பெற்று அவற்றை மூளைக்கும் உடலின் இதர பகுதிகளுக்கும் மின்அலை வடிவில் கடத்துவதைப் போலவே எண்ண அலைகளையும் கடத்துகின்றது. இதனை விஞ்ஞானம் Telepathy என்கின்றது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்களது கண்டுபிடிப்பின்படி மூளையைவிடவும் இதயத்தின் மின் அலைகள் நூறு மடங்கு பலமிக்கவை. அதேபோன்று இதயத்தின் மின் காந்த சக்தி மூளையைவிடவும் 5000 மடங்கு பலமானதாகும் என்கின்றனர். இந்த மின்அலைகள் மற்றும் மின்காந்த சக்தி மூலம் இதயம் சூழவுள்ளவர்களைக் கவர்ந்து ஈர்த்துவிடுகின்றது. அல்லது எண்ண அலைகளை அனுப்புகின்றது. ஒரு மனிதர் மற்றுமொருவருடன் வாய் மூலம் போசாது இதயத்தினூடாகவும் உறவாட முடியும் என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

சிலபோது நீங்கள் மனதுக்குள் நினைத்த ஒரு பாடலை இன்னுமொருவர் சப்தமிட்டுப் பாடிக் கொண்டு வருவார். நீங்கள் சொல்ல நினைத்த விடயத்தை உங்களது நண்பர் அப்படியே சொல்லி முடிப்பார். நீங்கள் ஒருவரைப் பார்த்து அவர் உங்களைப் பார்க்கவேண்டுமென நீங்கள் எண்ணினால், அவ்எண்ண அலைகள் அவரைச் சென்றடைந்தால், அவரும் உங்களைத் திரும்பிப் பார்ப்பார். இவை யாவும் உள்ளத்தின் எண்ண அலைவடிவிலான உரையாடல்களின் ஒரு வகையாகும்.

**இதயத்தின் வகைகள்**

அல்லாஹ் அல்குர்ஆனிலே இதயத்தை ஆறு பிரிவாக வகைப்படுத்திக் கூறுகின்றான். பின்னர் அவற்றில் இரண்டு விதமான இதயத்துடன் யாரெல்லாம் மறுமைநாளில் இறைவனைச் சந்திக்க வருகின்றார்களோ அவர்களுக்கே சுவனம் செல்லும் தகுதியும் உண்டு என்று கூறுகிறான். இதயத்தின் வகைகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

**இதயத்தின் வகை**

| | | |
|---|---|---|
| 1. | பொடுபோக்கான இதயம் | 18:28 |
| 2. | கடினமான இதயம் | 02:74 |
| 3. | மீளக்கூடிய இதயம் | 50:33 |
| 4. | ஆசையூட்டும் இதயம் | 12:53 |
| 5. | நிந்திக்கக்கூடிய இதயம் | 75:02 |
| 6. | அமைதியடைந்த இதயம் | 89:27 |

அமைதியடைந்த இதயத்தை அல்குர்ஆன் ஆரோக்கியமான இதயம் قلب سليم (37:84, 26:89) என்றும் அழைக்கின்றது.

இவ்விதயங்களில் மீளக்கூடிய இதயத்துடனும் அமைதியடைந்த அல்லது ஆரோக்கியமான இதயத்துடனும் யார் மறுமையில் தன்னைச் சந்திக்க வருகின்றாரோ அவரை சுவனத்தில் பிரவேசிக்கச் செய்வதாக அல்லாஹ் கூறுகின்றான். இதுவல்லாத மற்ற நான்கு வகையான இதயங்களும் நோயுடைய ஆரோக்கியமற்ற இதயங்களாகும். இதயத்தில் ஓட்டை (Whole in the Heart), மாரடைப்பு (Heart Attack) போன்ற நோய்கள் இதயத்தைப் பீடிப்பதையிட்டும் நாம் அஞ்சுவதோடு அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள மிகுந்த சிரத்தையும் எடுத்துக் கொள்கின்றோம்.

ஆனால், அவற்றைவிடவும் கொடிய பல இதய நோய்கள் (امراض القلب) இருக்கின்றன. அவை பற்றி நாம் அலட்டிக் கொள்வதே இல்லை. பொறாமை, பெருமை, வஞ்சகம், பொய், புரட்டு, குரோதம், நிதானமின்மை என்பன அவற்றுள் சில. இவற்றிலிருந்தும் எமது இதயத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஹாஸபா, தஸ்கியா, திக்ர், அவ்ராத் என பல்வேறு வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளார்கள். இவற்றின் மூலம் எமது இதயத்தை மேற்கூறிய ஆரோக்கியமான இரண்டு உள்ளங்களாக மாற்றிக் கொள்வதையே இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

இதயம் என்பது வெறுமனே ஒரு சதைப் பிண்டம், அது குருதியைப் பாய்ச்சும் வேலையை மட்டும்தான் செய்கின்றது என்றுதான் இதுகாலவரை நாம் அறிந்து வைத்திருப்போம். விஞ்ஞானமும் கூட இதுபோன்றதொரு விளக்கத்தையே கூறிக் கொண்டிருந்தது. ஆனால் இதற்கும் மேலாக, இதயத்தின் பல்வேறு தொழில்களைப் பற்றி 1400 வருடங்களாக அல்குர்ஆனும் அல்ஹதீஸும் கூறி வருவதை நாம் அவதானிக்கத் தவறி விட்டோம். இதயம் ஆற்றும் பல்வேறு தொழில்களில் ஒரு சிலதைத்தான் நாம் இங்கு பார்த்தோம். இத்துணை பெரும் அற்புதங்களைச் சுமந்திருக்கும் அல்குர்ஆன் எத்துணை மகோன்னதம் மிக்கதென்பதை இதிலிருந்தே விளங்க முடியும். அல்ஹம்துலில்லாஹ் என்று அவனுக்கு ஒரு முறை நன்றி செலுத்துவோம்.

**"நீங்கள் ஒன்றையுமே அறியாதவர்களாக இருந்த நிலையில், உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளிலிருந்து அல்லாஹ்தான் உங்களை வெளிப்படுத்தினான். மேலும் உங்களுக்கு செவிப்புலனையும் பார்வைகளையும் இதயங்களையும் நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவதற்காக ஆக்கியுள்ளான்." (16:78)** ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளத்தை சீர்படுத்துவோம்!



**மனித** உறுப்புகளுள் மிகவும் விசித்திரமான இனங்காண முடியாத அபூர்வமான ஓர் உறுப்பே உள்ளம். எம்மில் பலர் மனதை நோகடித்தல், உள்ளத்தை உடைத்தல் எனும் பிரயோகங்களை பரவலாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் அந்த உள்ளத்தின் உள்நிலையைப் பற்றி நாம் எப்போதாவது சிந்தித்ததுண்டா என் வினவினால் அதற்கான விடை எம்மில் பலரிடத்தில் பூச்சியமாகவே அமையும்.

"ஒருவரைப் பார்த்து தீர்ப்பு வழங்கி விடாதே! ஏனெனில், உலகில் புரிந்து கொள்ள முடியாததும் மாறக்கூடியதுமானது உள்ளமேயாகும்" என்ற ஒரு வாசகத்தை நான் வாசித்துள்ளேன். அல்லாஹ் இந்த உள்ளத்தை தந்தது அவனது அத்தாட்சிகளைப் பார்த்து நல்லுணர்ச்சி பெறுவதற்கு அவனுக்கு நன்றி செலுத்துவதற்குமேயாகும். உண்மையில் ஒரு மனிதனின் சிந்தனையில் அவனது மூளை மாத்திரம் பங்களிப்புச் செய்வதில்லை. அவனது உள்ளமும் சேர்ந்தே அதனுடன் பங்கு வகிக்கிறது.

இப்படியான ஒரு விசித்திரமான உறுப்பை பெற்ற மனிதர்களாகிய நாம் வஞ்சகம், பொறாமை, கெட்ட எண்ணம், பழிவாங்கும் எண்ணம் போன்ற அசிங்கமான உணர்வுகளால் அதனைக் களங்கப் படுத்துகிறோம். உள்ளம் சீரடைந்தால் மனிதனின் ஏனைய அனைத்து உறுப்புகளும் சீரடைவதுடன் அவனது ஒவ்வொரு செயற்பாடும் சீரானதாக அமைந்துவிடும். நமது உள்ளம் நம்மை அதிகாரம் செய்யத் தொடங்கினால் நாம் கோழைகளே!

ஒரு முஸ்லிம் கோழையாய் இருப்பதை விட வீரனாய் இருப்பதே அழகும் பெருமையுமாகும். எனவே, ஒவ்வொருவரும் உள்ளத்தை உன்னதமாக வைத்திருப்பதுடன் ஏனையோரையும் அதன் வழி நடக்க வைக்க முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ்.

***பரீஹா காசிம்***
***முஸ்லிம் மகளிர் அ.க.***

# தெரியாததை தெரிந்து கொள்ளுங்கள்

- இந்தியாவில் முதன் முதலாக மாதர் சங்கத்தை அமைத்த பெண்மணி யார்?- **சரோஜ் நளினி**
- சதுரங்க ஒஸ்கார் விருது பெற்றவர் யார்? **- விஸ்வநாதன் ஆனந்த்**
- எரிமலைப் பாறைகளின் மீது அமைந்துள்ள நாடு எது? **- ஐஸ்லாந்து**
- சுற்றுச் சூழல் தாக்கத்தால் மனித நலத்தில் ஏற்படும் விளைவுகளை ஆராயும் மருத்துவத் துறை பற்றி குறிக்கும் அறிவியல் நூலின் பெயர் என்ன?- **ஜியோ மெடிசின் (Geo Medicine)**
- மெக்சிகோ நாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்? **- ஜெம்நூலோ (1854)**
- இந்தியாவின் மிகப் பெரிய உயிரியல் பூங்கா எங்குள்ளது? **- அலிப்பூர்**
- இரத்த வகைகளைக் கண்டுபிடித்தவரின் பெயர் என்ன? **- லேண்ட் ஸ்டெயினர்**

***எஸ். எப். றுக்ஸானா***
***தரம்- 9, அ/ மனாருல் உலூம் மு.ம.வி.***
***கம்பிரிகஸ்வெவ***

# உங்களுக்கு மட்டும்

உலகிலேயே மிகப் பெரிய தாவரம் எது?
———— **ரெட்வூட் மரம் (Red wood)**

அதிகளவு தூரம் மணம் வீசக் கூடிய உலகிலேயே மிகப் பெரிய பூ எது? **ரஃப்லேசியா (Rafflesia)**

கல்போன்று காட்சியளிக்கும் தாவரம் எது?
———— **லித்தொப்ஸ் (Lithops)**

'பறக்கும் அணில்' எவ்வளவு தூரம் வரை பறக்கும்? ———— **450 மீட்டர் வரை**

எறும்பு தின்னியின் விஞ்ஞானப் பெயர் யாது?
———— **பங்கோலின் (Pangolin)**

உலகிலேயே வலிமை மிக்க பாம்பு எது?
———— **அனகொண்டா (Anaconda)**

அமெரிக்க குடியரசின் முதலாவது ஞாபகார்த்த நினைவுச் சின்னம் எது?
———— **பிசாசு கோபுரம் (The Devil's Tower)**

சாக்கடலின் ஆழம் எவ்வளவு? **- 399 மீட்டர்**

பிரபல்யம் வாய்ந்த கொதி நீரூற்றுக்கள் எங்கு உண்டு?
– **நியூஸிலாந்து, ஐக்கிய அமெரிக்க குடியரசு**

***பாத்திமா ஹனா அறபா, பொலன்னறுவை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பற்றிய சிறப்பான தகவல்கள்

- கலாசார அல்லது பண்பாட்டு முக்கோண வலயங்கள்
  **அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி**
- மூவின மக்களும் தரிசிக்கும் புனித மலை
  **சிவனொளிபாத மலை**
- இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி
  **அனுலா**
- முதன் முதலில் இலங்கையில் வெளியான செய்தித்தாள்
  **கொழும்பு ஜேர்னல்**
- இலங்கையில் கூடியளவு நெல் பயிரிடப்படும் மாவட்டம்
  **குருநாகல்**
- இலங்கையில் தொல்பொருட்கள், புராதன பொருட்கள் காணப்படும் இடம்
  **அநுராதபுரம்**
- இலங்கையில் ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள இடம்
  **கின்னியா (திருகோணமலை)**
- இலங்கையின் கல்வித்துறை அபிவிருத்திக்கு கூடியளவு நிதி உதவிகளை வழங்கும் சர்வ தேச நிறுவனம்
  **உலக வங்கி**
- இலங்கையிலுள்ள மிகப் பெரிய காடு
  **சிங்கராஜ வனம்**
- இலங்கையில் உள்ள ஒரே ஒரு குடாநாடு
  **யாழ்ப்பாணம்**
- இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி
  **சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க**
- இலங்கையின் முதலாவது பெண் பிரதமர்
  **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க**
- இலங்கையில் தேசிய அடையாள அட்டை வழங்கும் முறை அறிமுகமான ஆண்டு
  **1972**

***ஏ.எல். ஆயிஷா, தரம்- 9,***
***மட்/ ஹிழ்ரிய்யா வித்தியாலயம்***
***காத்தான்குடி***

# முதலாம் உலகப் போரின் நாசம்



முதலாம் உலகப் போர் *1914-1918* வரை நீடித்தது. *1914*ம் ஆண்டு ஒகஸ்ட் 4ம் திகதி போர் மூண்டது. தொடர்ச்சியாக 1561 நாட்கள் சண்டை நடந்தது. இதில் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள் எத்தனை தெரியுமா?

மொத்தம் 2 கோடி பேர் யுத்தத்தினால் மரணித்தனர். இதை விடவும் யுத்தம் முடிந்த பிறகும் உலகம் முழுவதும் பரவிய விஷக் காய்ச்சலால் சுமார் 2 கோடி பேர் உயிர் இழந்தனர். இதில் 40 இலட்சம் கோடி டொலர் மதிப்புள்ள சொத்துக்கள் நாசம் அடைந்தன.

**முதல் உலகப் போர் உயிர்ச் சேதம்**

| | |
|---|---|
| ஜேர்மனி | - 1 770 000 |
| ரஷ்யா | - 1 700 000 |
| பிரான்ஸ் | - 1 360 000 |
| ஆஸ்திரியா | - 1 200 000 |
| பிரிட்டன் | - 910 000 |
| இத்தாலி | - 650 000 |
| ருமேனியா | - 450 000 |
| துருக்கி | - 330 000 |
| பல்கேரியா | - 240 000 |
| சேர்பியா | - 190 000 |
| பெல்ஜியம் | - 60 060 |
| அமெரிக்கா | - 50 000 |
| போர்த்துக்கல் | - 13 000 |

***எப். இம்லா சஹுதுல்லா***
***தரம்- 6 ஸாஹிரா மு.வி, எல்லைமுல்ல***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

ஓடியோ மீற்றரைக் கண்டுபிடித்தவர் யார்?
- தோமஸ் அல்வா எடிசன்

ஒளியை அளவிடும் கருவி யாது?
- லக்ஸ்

இலங்கை மக்களின் படிப்பறிவு வீதம் என்ன?
- 92%

மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
- பென்ஜமின் பிராங்ளின்

அதிக நிறமூர்த்தங்களை கலங்களில் கொண்டுள்ள தாவரம் எது?
- பன்னத் தாவரம்

'ஹரி பொட்டர்' நூலின் ஆசிரியர் யார்?
- ஜே.கே. ரோவ்லின்

மகாத்மா காந்தி பிறந்த நாடு எது?
- இந்தியா

ஒலியை அளவிடும் கருவி எது?
- டெசிபல்

*ஷப்னா ஹுசைன், தரம்- 8,*
*வெலம்பொட மு.ம.வி, வெலம்பொட*

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: தனது அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிறைய சாப்பிடுபவர் உண்மையான முஃமினாக இருக்க மாட்டார். (பைஹகி)

# தெரிந்து கொள்வோம்

- 2002ம் ஆண்டு சார்க் நாடுகளின் தலைமைத் துவத்தை ஏற்றுக் கொண்ட நாடு? - நேபாளம்
- எரிமலை இல்லாத கண்டம் எது? - அவுஸ்திரேலியா
- முற்றாக பச்சை நிறமுடைய தேசியக் கொடியைக் கொண்டுள்ள நாடு? - லிபியா
- ஐக்கிய ஜேர்மனி உருவாக்கப்பட்ட ஆண்டு - 03.10.1990
- நடுஇரவில் பூக்கும் மலர் எது? - இருவாட்சி

*என். மிப்ரின்,*
*தி/ புஹாரி நகர் மு.வி,*
*முள்ளிப்பொத்தானை*

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஒருவர் கேட்டார்; மிகச் சிறந்த நற்செயல் எது? அதற்கு நபியவர்கள், பிறருக்கு உணவளிப்பதும் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும் ஸலாம் சொல்வதுமாகும் என பதிலளித்தார்கள். (அல்புகாரி)**

# தெரிந்து கொள்ளுங்கள்

| | |
|---|---|
| நீரினுள் பறக்கும் பறவை | - பென்குயின் |
| முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் ஒரு முலையூட்டி | - பிளாற்றிப்பசு |
| மயிர் கொல்லிப் பூச்சிகளை அழித்து விடும் பூச்சி | - லேட்டி பார்ட் பீடல் |
| கம்பளி பெறப்படும் விலங்கு | - செம்மறி ஆடு |
| மாணிக்கக் கல் அகழ்வுத் தொழிலில் பயன் படுத்தப்படும் கூடை | - நாம்புவல |
| ஒளியை வெளிவிடும் உயிரினங்கள் | - மின் மினிப் பூச்சி, சில கடல் மீன்கள் |
| சப்தமிடத் தெரியாத விலங்கு | - ஒட்டகச் சிவிங்கி |

*எம்.எப். ஸாஹிமா, தரம்- 8, அல்மின்ஹாஜ் தேசிய பாடசாலை, ஹபுகஸ்தலாவ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில்...

- உலகில் சனத்தொகை கூடிய நகரம் எது? டோக்கியோ
- உலகில் மிக அதிகமான கார்கள் உள்ள நகரம் யாது? நியூயோர்க்
- உலகில் மிகப் பெரிய துறைமுகம் அமைந்துள்ள இடம்? நியூயோர்க்
- உலகில் மிகப் பெரிய கைக்கடிகாரங்களை தயார் செய்யும் நாடு எது? சுவிட்சர்லாந்து
- உலகில் மிகப் பெரிய நூல் நிலையம் அமைந்துள்ள இடம் யாது? ரஷ்யத் தலைநகரான மொஸ்கோ
- உலகில் அதிக வேகமாக ஓடும் பாம்பினம் எது? ப்ளேமிக் மாம்பர்
- உலகில் மிக குளிர்ச்சியான இடம் எது? வெர்கோ பார்ஸக்
- உலகில் மிக வெப்பமான இடம் எது? அஸ்ஸியா
- உலகில் முதன் முதலில் தனக்கென ஒரு தேசியக் கொடியினை உருவாக்கிய நாடு எது? டென்மார்க்
- உலகின் நுழைவாயில் என்று அழைக்கப்படும் இடம் எது? கனடாவிலுள்ள வேங்குவர்

***பஸ்மினா, தரம்- 8, வெலம்பொட மு.ம.வி, வெலம்பொட***

## கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிப்பாளர்களும்

| | |
|---|---|
| தீப்பெட்டி | - ஜோன் வோகர் |
| மோட்டார் சைக்கிள் | - ஜி. டிம்லர் |
| ஹெலிகொப்டர் | - இட்டனி ஓம்ச்சன் |
| மின்குமிழ் | - தோமஸ் அல்வா எடிசன் |
| விமானம் | - ஓர்வில் ரைட்-வில்பர் ரைட் |
| தையல் இயந்திரம் | - பீ. திமோனியர் |
| யுத்த தாங்கி | - சேர்.ஏ. ஸ்விங்டன் |
| பரசூட் | - ஏ.ஜே. கர்னரின் |
| நியோன் விளக்கு | - ஜே. க்ளவுட் |
| திசை காட்டி | - இல்மர் ஸ்லரி |

***சல்மா மிப்லார், தரம்- 10***
***முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கள்எலிய***

## ஆயுட் காலம்

| விலங்குகள் | ஆயுட்காலம் (ஆண்டுகள்) |
|---|---|
| யானை | - 70 |
| திமிங்கிலம் | - 50 |
| ஒட்டகம் | - 40 |
| அன்னம் | - 40 |
| புலி | - 30 |
| பென்குயின் | - 25 |
| குரங்கு | - 20 |
| சிங்கம் | - 15 |
| மான் | - 10 |
| கரடி | - 5 |

***ஏ.ஜே. பாத்திமா நோபா, மருதமுனை***

## 2011 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



எம்.ஜே.எம். நுஸ்ரி (175)
க/ தெல்தோட்டை மு.ம.க.
எச்.எம்.எம். அலி ஜின்னா-நூர்ஜஹான்



எம்.ஏ. பாத்திமா அஸ்ரின் (179)
பொலன்னறுவை மு.ம.க.
முஹம்மட் அறபா-உம்முல் ஹினாயா



எம்.எப்.எப். மின்ஸா (173)
குருகுத்தலை மு.ம.வி, கடுகண்ணாவ
முஹம்மத் பஸீல்-சர்மிளா



எம்.ஆர். முப்திகா ரிஸ்வான் (169)
அல்-ஹிக்மா மு.ம.வி. ரஜவெல்ல
இஸட்.ஏ. ரிஸ்வான்-ஜே. முனவ்வரா



எம்.எப். ஹப்ஸா (165)
ஸாஹிரா தே.பா. மாவனல்லை
முஹம்மட் பளீல்-றுஸ்னா பேகம்



எம்.எஸ்.எப். மின்ஹா (168)
மதீனா தேசிய பாடசாலை, மடவளை பஸார்
எஸ்.எம். சுலைஹார்-சித்தி சாஹிரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# அன்றாட வாழ்வில் அரபு மொழி

## اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

- இன்றைய பாடத்தில் اَلْمَصْدَرُ பற்றிய சில விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முனைவோம்.
- அல்மஸ்தர் என்பது 'வினையடி' அல்லது 'மூலச் சொல்' என்று பொருள்படும். இது குறிப்பிட்ட நிகழ்வைக் குறித்துக் காட்டக்கூடிய பெயர்ச்சொல்லாகும்.
- اَلْمَصْدَرُ என்பதன் அடிப்படை வடிவம் فَعْلٌ என்பதாகும்.

## اَلْمَصْدَرُ

| | | |
|---|---|---|
| உதவி செய்தல் | نَصْرٌ ← | نَصَرَ ← يَنْصُرُ |
| திறத்தல் | فَتْحٌ ← | فَتَحَ ← يَفْتَحُ |
| படைத்தல் | خَلْقٌ ← | خَلَقَ ← يَخْلُقُ |
| சாப்பிடுதல் | أَكْلٌ ← | أَكَلَ ← يَأْكُلُ |
| கொலை செய்தல் | قَتْلٌ ← | قَتَلَ ← يَقْتُلُ |
| அடித்தல் | ضَرْبٌ ← | ضَرَبَ ← يَضْرِبُ |
| உடைத்தல் | كَسْرٌ ← | كَسَرَ ← يَكْسِرُ |
| வைத்தல் | وَضْعٌ ← | وَضَعَ ← يَضَعُ |
| பயப்படுதல் | خَوْفٌ ← | خَافَ ← يَخَافُ |
| எறிதல் | رَمْيٌ ← | رَمَى ← يَرْمِيْ |
| ஓடுதல் | جَرْيٌ ← | جَرَى ← يَجْرِيْ |
| நிறுத்தல் | وَزْنٌ ← | وَزَنَ ← يَزِنُ |
| வரைதல் | رَسْمٌ ← | رَسَمَ ← يَرْسُمُ |

| | | |
|---|---|---|
| வெட்டுதல் | قَطْعٌ ← | قَطَعَ ← يَقْطَعُ |
| தயாரித்தல் | صُنْعٌ ← | صَنَعَ ← يَصْنَعُ |
| ஊற்றுதல் | صَبٌّ ← | صَبَّ ← يَصُبُّ |
| வேலை செய்தல் | عَمَلٌ ← | عَمِلَ ← يَعْمَلُ |
| குடித்தல் | شُرْبٌ ← | شَرِبَ ← يَشْرَبُ |
| வாசித்தல் | قِرَاءَةٌ ← | قَرَأَ ← يَقْرَأُ |
| ஓதுதல் | تِلاَوَةٌ ← | تَلاَ ← يَتْلُوْ |
| எழுதுதல் | كِتَابَةٌ ← | كَتَبَ ← يَكْتُبُ |
| நுழைதல் | دُخُوْلٌ ← | دَخَلَ ← يَدْخُلُ |
| உதித்தல் | طُلُوْعٌ ← | طَلَعَ ← يَطْلُعُ |
| வெளியேறுதல் | خُرُوْجٌ ← | خَرَجَ ← يَخْرُجُ |
| அமருதல் | جُلُوْسٌ ← | جَلَسَ ← يَجْلِسُ |
| தரிசித்தல் | زِيَارَةٌ ← | زَارَ ← يَزُوْرُ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

اَلْمَصْدَرُ இனை வைத்து வாக்கியங்களை அமைக்கும் போது அவை அமையப் பெறும் விதம்

اَلنَّصْرُ مِنَ اللهِ உதவி அல்லாஹ்விடமிருந்து வரக்கூடியதாகும்.

اَلْفَتْحُ قَرِيْبٌ வெற்றி சமீபத்திலிருக்கிறது.

اَلْخَلْقُ صِفَةُ اللهِ படைத்தல் அல்லாஹ்விற்குரிய பண்பாகும்.

اَلْقِرَاءَةُ مُفِيْدَةٌ வாசிப்பு பயனுள்ளதாகும்.

اَلْخَوْفُ اِبْتِلَاءٌ பயம் ஒரு சோதனை.

---

புத்தகம் + வாசித்தல்

اَلْقِرَاءَةُ + اَلْكِتَابُ

இரண்டு சொற்களையும் இணைத்து எழுதும்போது முழாப் முழாப் இலைஹி அமைப்பினைப் பெற்று வரும்.

قِرَاءَةُ الْكِتَابِ புத்தகத்தை + வாசித்தல்

قِرَاءَةُ الْكُتُبِ مُفِيْدَةٌ புத்தகம் வாசித்தல் பயனுள்ளதாகும்.

قِرَاءَةُ الْقُرْآنِ عِبَادَةٌ குர்ஆனை ஓதுதல் இபாதத்தாகும்.

شُرْبُ الْخَمْرِ حَرَامٌ மது அருந்துவது தடுக்கப்பட்டதாகும்.

---

| | |
|---|---|
| கட்டுரை + எழுதுதல் | கட்டுரை எழுதுதல் |
| اَلْكِتَابَة + اَلْمَقَالَةُ | كِتَابَةُ الْمَقَالَةِ |
| சூரியன் + உதித்தல் | சூரியன் உதித்தல்/ சூரிய உதயம் |
| اَلطُّلُوْعُ + الشَّمْسُ | طُلُوْعُ الشَّمْسِ |
| முஹம்மத் + வாசித்தல் | முஹம்மதின் வாசிப்பு |
| اَلْقِرَاءَةُ + مُحَمَّدٌ | قِرَاءَةُ مُحَمَّدٍ |
| படங்கள் + வரைதல் | படம் வரைதல்/ படங்களை வரைதல் |
| الرَّسْمُ + الصُّوَرِ | رَسْمُ الصُّوَرِ |
| மரம் + வெட்டுதல் | மரத்தை வெட்டுதல் |
| اَلْقَطْعُ + الشَّجَرَةُ | قَطْعُ الشَّجَرَةِ |
| மாணவர்கள் + வெளியேறுதல் | மாணவர்களின் வெளியேற்றம் |
| اَلْخُرُوْجُ + الطُّلَّابُ | خُرُوْجُ الطُّلَّابِ |
| உணவு + சமைத்தல் | உணவு சமைத்தல் |
| اَلطَّبْخُ + الطَّعَامُ | طَبْخُ الطَّعَامِ |
| اَلْحَرْثُ + الأَرْضُ<br>நிலத்தை உழுதல் | حَرْثُ الأَرْضِ |
| اَلصُّنْعُ + الشَّايُ<br>தேநீர் தயாரித்தல் | صُنْعُ الشَّايِ |
| اَلْفَتْحُ + الْبَابُ<br>கதவு + திறத்தல் | கதவைத் திறத்தல்<br>فَتْحُ الْبَابِ |
| اَلْكَسْرُ + الأَصْنَامُ<br>சிலைகளை உடைத்தல் | كَسْرُ الأَصْنَامِ |

خَافَ مُحَمَّدٌ مِنَ الأَسَدِ

முஹம்மத் சிங்கத்துக்கு பயப்பட்டான்.

خَافَ (مِنْ) خَافَ (عَلَى)

اَلْخَوْفُ + مِنْ + الأَسَدِ

اَلْخَوْفُ مِنَ الأَسَدِ சிங்கத்துக்குப் பயப்படுதல்

اَلْخَوْفُ عَلَى الطِّفْلِ குழந்தைக்கு ஏதும் (நடந்துவிடுமோ) எனப் பயப்படல்.

جَلَسَ (عَلَى)

اَلْجُلُوْسُ عَلَى الْكُرْسِيِّ கதிரையில் அமர்தல்

بَحَثَ (عَنْ) தேடினான்

بَحَثَ (فِيْ) ஆய்வு செய்தான்

اَلْبَحْثُ عَنِ الْكِتَابِ புத்தகத்தைத் தேடுதல்

اَلْبَحْثُ فِيْ التَّارِيْخِ வரலாற்றை ஆய்வு செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Sister Rumman




### HOW MUCH DO YOU KNOW?

**Assalamu alaikum** dear friends,
I wish you 'Eid Mubarak'. Try to make a needy person happy on the Haj festival day!!
Some of our friends sit for the Ordinary level exams next month. Let's wish them too "All the best!"

## *Here are some tips to face the exam well*



1. Eat nutritious food. Don't skip meals. This will help you work hard.
2. Think positive. Don't mess up your brain with all the negative thoughts.
3. Make the best plan. Count the remaining days and hours for you to do revisions, and plan them well.
4. Be punctual. Attend to each of your work on the planned time.
5. Do not procrastinate. Don't say 'I'll do it later'. It is the attribute of the Shaytan.
6. Make Dua from Allah. If you don't get His blessings, nothing would work for you.



"Success is a journey, not a destination"
-Ben Sweetland




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Try to read the passage and answer the questions



I was sick that day. Mom asked me to stay back from school. But the year end exams frightened me. All the revisions were going on, and I had to attend them all. I had my breakfast with much difficulty, and drank two painkiller pills. Then I asked dad to drop me at school. It was a hot day. My illness was worsening as time passed. None of the lessons fascinated me. My best friend suggested me to rest for a while at the sick room, so that I would feel better. She promised me to explain the parts I would miss. I slowly stood up to ask permission from Mrs. Kamil, my class teacher.





(1) What is the passage about?
(2) Write two prepositions used in the passage?
(3) Write an adjective from the passage?
(4) Write an adverb from the passage?
(5) What is the meaning of 'None of the lessons fascinated me'?
(6) What do you think about the 'friend' mentioned in the passage?

# Here is a word game to test your vocabulary. Try this with your friends

Try to build a word ladder on a given noun. Count the time, and find out who builds the tallest ladder within a limited time. Better use only nouns for the first time. Here is an example.

The word is **Elephant**
The last letter of 'elephant' is T, so the next word should begin with T. And it goes on like that....





14. N....
13. Gun
12. Egg
11. Lake
10. Goal
9. Dog
8. Red
7. Tower
6. Net
5. Sun
4. Earrings
3. Apple
2. Tea
1. Elephant

Did you enjoy the game friends? Try the game with more words. It's a very interesting way to revise your vocabulary.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Finally let's have a look at some verbs. These verbs are called '**irregular verbs**'.



| Verb | Past | Present Perfect |
|---|---|---|
| Go | Went | Gone |
| Bid | Bed | Bidden |
| Eat | Ate | Eaten |
| Drink | Drank | Drunken |
| Sleep | Slept | Slept |
| Bear | Bore | Borne |
| Blow | Blew | Blown |

These verbs are 'irregular' because their past and present perfect tense are not in the regular forms. Like in

**Cook Cooked Cooked**

## Your corner

### Fruits

Fruits, Fruits every kind of fruits
That comes from Allah's creation
Allah created them
For us to eat and taste
We have choices of Fruits
Whether Apple or Orange
All come from Allah.

We all Love fruits
And have a Favourite of them
You might have one
But mine is grapes
It's purple and taste
It grows in a vine
We all must thank Allah for these fruits

**Maryam Muneer**
**Dematagoda.**

## Entry to the Maldives

- Almost all visitors to the Maldives arrive by air.
- Male International Airport is situated in Hulule.
- All visitors must have valid passport.
- Visitors coming from yellow fever infected areas should provide an international certification of inoculation.
- No visa is required in advance. All visitors get 30 days visa on arrival.
- All visitors who enter the Maldives should have a return air ticket and sufficient funds (currency/ travelers cheques/ Credit cards)
- For further information contact the Maldivian Embassy in your country.

**Mohamed Nabeel**
**Zahira College Gintota, Galle.**



## Golden thoughts

**Shabeer Ahmedh, Grade 07, Crescent International school, Thihariya**

- Give more priority to your heart than to your knowledge. Because, the knowledge without attitude is like an aero plane that does not know the direction.
- Do not be proud of your beauty. Because you sacrificed nothing for that.
- Show your mother that you have kindness with gratefulness to her. Because, a mother thinks of her children until her last breath.
- Do not judge anyone seeing their appearance. Because, the changeable and the understandable machine is the heart.
- Cut down your desires. Because your life time is not enough to reach every thing.

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

**HOW MUCH DO YOU KNOW?**

A 61/5,
Zahira Road,
Mawanella.

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### 10ம் தரம்

*1.* பின்வரும் குளங்களை அமைத்த மன்னர்களை வெற்றிடங்களில் எழுதுக.

A. திஸா வாவி ..................................................

B. மின்னேரியா ..............................................

C. கந்தளாய் குளம் .........................................

D. மகாவிலச்சி ...............................................

E. அபய வாவி ..................................................

*2.* பின்வரும் காரணங்களுக்காக அமைக்கப்படும் குள உறுப்புக்களைத் தருக.

A. நீர் அரிப்பிலிருந்து குளக்கட்டைப் பாதுகாத்தல் ..................................................

B. நீரின் அழுத்தத்திலிருந்து குளக்கட்டைப் பாதுகாத்தல் .........................................

C. நீரை வயல்களுக்கு வெளியேற்றும் கதவு ......

D. மேலதிக நீரை வெளியேற்றல் ......................

E. நதி நீரைத் தேக்கி வைத்தல் .........................

*3.* நீர்வள நாகரிக காலத்தில் பின்வரும் பொறுப்புக்களை ஆற்றியவர்களைத் தருக.

A. போர் உபகரணங்களுக்குப் பொறுப்பானவர்கள் ..................................................

B. கொடிகள், பதாதைகளுக்குப் பொறுப்பானவர்கள் ..................................................

C. திறைசேரிக்குப் பொறுப்பானவர்கள் ...........

D. அரசனின் ஆவணங்களுக்குப் பொறுப்பானவர்கள் ..................................................

*4.* பின்வரும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் உருவாக்கப்பட்ட குடியேற்றங்களைத் தருக.

A. மல்வத்து ஓயா.........................................

B. கலா ஓயா ...............................................

C. மகாவலி கங்கை .......................................

*5.* பின்வரும் இராச்சியங்களின் தலைநகரங்களைத் தருக.

A. மகதம் ................ B. வத்சய .................

C. அவந்தி ...................................................

*6.* பின்வரும் மன்னர்கள் ஆட்சி செய்த தலைநகரங்களைத் தருக.

A. நிசங்க மல்லன் ..........................................

B. செனரத் ............... C. வசபன் ................

D. இரண்டாம் பராக்கிரமபாகு ..............................

E. ஆறாம் பராக்கிரமபாகு ....................................

7\. A. அருகிலுள்ள படத்தில் காணப்படும் ஓவியம் எங்கு காணப்படுகிறது?




B. இது எந்த மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டது?

C. அம்மன்னனது தந்தையின் பெயர் என்ன?

D. தந்தை அமைத்த குளத்தின் பெயர் என்ன?

*8.* அருகிலுள்ள இலங்கைப் படத்தில் A, B, C, D, E ஆகிய எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.




(திம்புலாகல, மகியங்கன, முன்னேஸ்வரம், மடு தேவாலயம், உலுவெல)

A. ........... B. .......... C. ........... D.......... E. ...........

### விடைகள்

1\. A. தேவநம்பிய தீசன் B. மகாசேனன்
C. 2ம் அக்போ D. வசபன்
E. பண்டுகாபயன்

2\. A. அலைதாங்கி B. கலிங்கற்றொட்டி
C. கலிங்கல் D. சுருங்கை
E. அணைக்கட்டு

*3.* A. அசிக்காகிக B. என்னக்காகக
C. படகாரிக D. மஹலே

*4.* A. அநுராத கிராமம் B. விஜத கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. விஜிதபுர D. மகாகம
E. தீகவாபி F. கதிர்காமம்

5. A. பவுளுப் நகரம் B. கௌசம்பி C. உஜ்ஜெனி

6. A. பொலன்னறுவை B. கண்டி
C. அனுராதபுரம் D. தம்பதெனியா

E. கோட்டை

7. A. சிகிரியாவில் B. காசியப்பன்
C. தாதுசேனன் D. கலா வாவி

8. A. மடு தேவாலயம் B. உறுவெல
C. முன்னேஸ்வரம் D. மகியங்கன
E. திம்புலாகல

## தரம் - 11

I. பின்வரும் நாடுகளுள் வார்சோ அமைப்பில் அங்கம் வகித்த 3 நாடுகளைத் தருக. (3 புள்ளிகள்)
கனடா, போலந்து, பிரான்ஸ், ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி

II. ரஷ்யா வல்லரசாக வளர்ச்சியடைய வழிவகுத்த காரணிகள் 4 தருக. (4புள்ளிகள்)

III. ரஷ்யா வீழ்ச்சியடைய வழிவகுத்த காரணிகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

IV. ரஷ்யா வீழ்ச்சியடைந்ததால் ஏற்பட்ட உள்நாட்டு விளைவு ஒன்றையும் வெளிநாட்டு விளைவு ஒன்றையும் விளக்குக. (6 புள்ளிகள்)

### விடைகள்

I. போலந்து, ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி

II. ஆளுமைமிக்க தலைவர்கள் வாய்த்தமை
K.G.B உளவுச் சேவை
பொதுவுடமை அணிக்கு தலைமை தாங்கியமை
வார்சோ அமைப்பு

III. **அ) பாதுகாப்பு செலவு அதிகரித்தமை**

ரஷ்யா பொருளாதார அபிவிருத்தியை விட பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. முதலாளித்துவ அணியை சேர்ந்த நாடுகள் உற்பத்தி செய்த ஆயுதங்களை விட அதிகமான ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு அதிக ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் அதிக ஆர்வத்தைக் காட்டியது. நீர்மூழ்கிக் கப்பல்களையும் விமானம் தாங்கிக் கப்பல்களையும் ஏவாயுதங்களையும் அதிகளவு உற்பத்தி செய்வதில் குருஷேவ், பிரஷ்னேவ் முதலிய ரஷ்ய ஜனாதிபதிகள் அதிக கவனத்தை செலுத்தினர். பாதுகாப்புக்கு அதிக பணம் செலவிடப்பட்டதால் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு முதலியன பாதிக்கப்பட்டன.

**ஆ) சந்தையின் தேவைக்கு ஏற்ப பொருட்கள் உற்பத்தி செய்யப்படாமை**

முதலாளித்துவ நாடுகள் சந்தையின் நிலைமைக்கேற்பவே தமது உற்பத்திகளை மேற்கொண்டன. இதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விரைவாக சந்தையில் விற்கப்பட்டன. இதனால் அந்த நாடுகளின் வருமானம் உயர்வடைந்தது. ஆனால், ரஷ்யா பொதுவுடைமை நாடாக விளங்கியமையால் சந்தையின் தேவைக்கேற்ப தனது பொருட்களை உற்பத்தி செய்யவில்லை. இதனால் உற்பத்திப் பொருட்கள் விலைபோகாது தேங்கிக் கிடந்தன. இதன் காரணமாக பொருளாதாரம் பாதிப்படைந்தது. ரஷ்யாவின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டதனால் வறுமை, உணவுத் தட்டுப்பாடு முதலியன அங்கு ஏற்பட்டன.

IV. **பல நாடுகளாக பிளவுபட்டமை**

ஜனாதிபதி மிகையில் கொப்பசேவ் என்பவர் பெரெஸ்ரெய்கா, கிளாஸ் நொட்ஸ் ஆகிய சீர்திருத்தங்களை ரஷ்யாவில் அறிமுகப்படுத்தினார். இச்சீர்திருத்தங்கள் சோவியத் யூனியனில் அங்கம் வகித்த சோவியத்களுக்கு (மாநிலங்களுக்கு) பிரிந்து செல்லும் அதிகாரங்களை வழங்கின. இதனைப் பயன்படுத்தி மாநிலங்கள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்றன. பரப்பிலும் பலத்திலும் உலகில் முதன்மை பெற்று விளங்கிய சோவியத் ஒன்றியம் 15 நாடுகளாகப் பிரிந்தது. ஆரம்பத்தில் பால்டிக் நாடுகளான லிதுவேனியா, லத்வியா, எஸ்தோனியா முதலிய நாடுகள் பிரிந்து சென்றன. சோவியத் ரஷ்யா இவ்வாறு வீழ்ச்சியடைந்தமைக்கு அமெரிக்க உளவுச் சேவையான C.I.Aயே காரணமாகும்.

**வார்சோ அமைப்பு வீழ்ச்சியடைந்தமை**

முதலாளித்துவ நாடுகளின் பாதுகாப்பு அமைப்பான வார்சோவுக்கு இணையாக, பொதுவுடைமை நாடுகள் வர்சோ அமைப்பை 1955.05.11 இல் ஏற்படுத்தின. இந்த அமையம் பொதுவுடைமை நாடுகளின் பாதுகாப்பு நலனுக்காக பல சேவைகளை செய்தது. 1956இல் ஹங்கேரியில் ஏற்பட்ட புரட்சியையும் 1968 செக்கோஸ்லேவேக்கியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியையும் வார்சோ அமைப்பே அடக்கியது. சோவியத் ரஷ்யா 1982இல் வீழ்ச்சியடைந்ததும் வார்சோ அமைப்பும் சீர்குலைந்தது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை என்பது பாடத்திட்டத்தின் இலக்குகளைப் பரீட்சிப்பது

**அகரம்: பொதுவாக பரீட்சைகளி லும் குறிப்பாக ஆண்டிறுதிப் பரீட்சைகளிலும் மாணவர் களிடம் எதிர்பார்ப்பது என்ன?**


**எம்.எச்.எம். ஹஸன்:** பொதுக் கல்வியைப் பொறுத்த வரையில் அது 11 வருடங்களைக் கொண்டது. அதில் தரம் 01 - 05 வரை ஆரம்பக் கல்வியும் தரம் 06 - 11 வரை இரண்டாம் நிலைக் கல்வியும் வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு அடுத்த தரத்தில் கல்வி கற்க அனுமதிக் கப்படுகின்றனர். எனவே, பரீட்சை என்பது மாணவர்கள் அடுத்த தரத்தில் கற்கத் தகுதியானவர்களா? என்பதைப் பரீட்சிக்கும் பிரவேசத் தகைமையாகவே கொள்ளப்படுகிறது.

அது மட்டுமல்லாமல், பரீட்சையானது மாணவர்களினது மாத்திரமல்லாது ஆசிரியர்களினதும் முன்னேற்ற அறிக்கையாகவே கருதப்படுகிறது. மாணவர்களின் முன்னேற்ற அறிக்கை எனும்போது மாணவர்கள் தாம் கற்ற விடயங்களில் குறிப்பிட்ட அடைவை அடைந்திருக்கிறார்களா? என்பதைப் பரீட்சிப்பதாகவே அமைகிறது.

மாணவர்கள் ஆண்டிறுதிப் பரீட்சைக்கு முன் பாடசாலையில் அலகுப் பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் மற்றும் கணிப்பீடு, ஒப்படைகள் என்பனவற்றை செய்திருப்பர். இவற்றில் விட்ட தவறுகளை நிவர்த்தி செய்து தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியதே ஆண்டிறுதிப் பரீட்சையாகும்.

மேலும் புள்ளி விபர ரீதியான பெறுபேறுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் மட்டங்களை ஒப்பிட்டு அறிய உதவுகிறது. ஒப்பிட்டு அறிவது என்பது தனது நிலையை தனது கடந்த கால பரீட்சைகளோடு ஒப்பிட்டு அறிவது. உதாரணமாக இரண்டாம் தவணைப் பரீட்சைப் பெறுபேறுகளோடு மூன்றாம் தவணைப் பரீட்சைப் பெறுபேற்றை ஒப்பிட்டு அறியலாம். மற்றையது, தனது நிலையை மற்றவர்களோடு ஒப்பிட்டு அறிவது. உதாரணமாக மற்றவர்கள் கூடிய புள்ளிகளைப் பெற்றதற்கான காரணம் என்ன; நான் எந்த வினாவுக்கு சரியாக விடையளிக்கத் தவறினேன்; கூடிய புள்ளியைப் பெற்றவர் எவ்வாறு அதனைப் பெற்றுக் கொண்டார் போன்ற விடயங்களை ஒப்பு நோக்குவதன் மூலம் அறிந்து கொள்வது.

இவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் தான் பெற்ற புள்ளிகளை விட பெறத் தவறிய புள்ளிகளுக்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும். நான் விடையெழுதும் போது விட்ட தவறுகள் என்ன, எவ்வாறு விடையளித்திருந்தால் கூடிய புள்ளிகளைப் பெறலாம் என்பதை மீள்பரிசீலனை செய்வது கூடிய பயனளிக்கும்.



எம்.எச்.எம். ஹஸன் (M.Ed)
(முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

**உண்மையில் இதற்குக் காரணம், பயமல்ல; பயத்தினால் வந்த விளைவுகளே! இவையே எம்மை உடல், உள ரீதியாக பாதிப்படையச் செய்து சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்குத் தடையாக அமைகின்றன. எனவே, பயப்படுவதால் எமக்குத்தான் நஷ்டம் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகரம்: பரீட்சைக்கு ஓரிரு வாரங்களிருக்கும்போது மாணவர்கள் எவ்வாறு தங்களைத் தயார்படுத் திக் கொள்ள வேண்டும்?**

**எம்.எச்.எம். ஹஸன்:** இன்று மாணவர்கள் அதிகமான நேரங்களை மேலதிக வகுப்புகள் (Tution) மற்றும் கருத்தரங்குகள் (Seminar) என்பவற்றிற்கு செல்வதற்கே செலவிடுகின்றனர். இது பிழையென்பதல்ல. ஆனால், சுயகற்றலில் அவர்கள் ஈடுபடாது முழுக்க முழுக்க கற்பிக்கின்ற விடயங்களைக் கேட்பதிலேயே கவனமெடுப்பது உரிய பயனைத் தராது. எனவே, மாணவர்கள் பரீட்சை நெருங்கும் காலப்பகுதியில் சுயகற்றலில் அதிக கவனமெடுப்பது சிறந்த பெறுபேறைப் பெற்றுக் கொடுக்கும்.

மாணவர்கள் தமது பாணியில் படிக்க வேண்டும். தனக்கே உரிய பிரத்தியேகமான நுட்பங்களைக் கையாண்டு தனது ஆற்றல்கள், திறமைகள் என்பவற்றிற்கு ஏற்ப அவருக்கே உரிய முறைகளில் கற்க வேண்டும். உதாரணமாக ஒவ்வொருவரும் குறிப்பெடுக்க ஒவ்வொரு விதமான நுட்பங்களைக் கையாள்வர். இவ்வாறு கற்பது நிறைந்த நன்மையைத் தரும்.

பரீட்சைக்கு ஓரிரு வாரங்கள் இருக்கும்போது முழுப் பாடத்திட்டத்தையும் மீண்டும் வாசிக்க முயற்சிக்காமல் குறிப்பெடுத்திருந்தால் அவற்றை நுணுக்கமாகவும் கவனமாகவும் ஊன்றிக் கற்க வேண்டும்.

பரீட்சை நெருங்கும்போது கற்பது மாத்திரமல்லாமல், உள்ளதிற்கும் உடலுக்கும் ஓய்வளிக்கவும் வேண்டும். உள்ளத்திற்கு ஓய்வளிப்பது என்பது ஆரோக்கியமான மனோநிலையைப் பெறுவதாகும். பரீட்சை பற்றிய பயம் மற்றும் பதற்றம் என்பன நாம் கற்ற விடயங்களை உரிய நேரத்திற்கு ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்குத் தடையாக அமைந்துவிடும். இவை எமது ஞாபக சக்தி, உள்ளார்ந்த ஆற்றல்கள் என்பன வெளிப்படைத் தடையாக அமைந்துவிடலாம்.

உடலுக்கு ஓய்வளிப்பது என்பது கற்காமல் இருப்பதல்ல; மாறாக, எமது சக்திக்கு மீறி கற்காமல் இருப்பதாகும். சாப்பிடாமல் பசியோடு இருப்பதும் போதியளவு தூக்கமில்லாமல் விழித்திருந்து கற்பதும் பயனளிக்கும் என மாணவர்கள் நினைக்கின்றனர். அல்லது பரீட்சை பற்றிய பயத்தால் அவ்வாறு கற்கின்றனர். கற்பது மாத்திரம் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுத்தராது; சிறப்பாகவும் வினைத்திறனாகவும் பரீட்சை எழுதுவதே சிறந்த பெறுபேற்றை அடைய வழியாகும்.

விழித்திருந்த உடலும் உள்ளமும் ஓய்விழந்து கற்பதால், தொடர்ச்சியாக நடைபெறுகின்ற பரீட்சையை ஒழுங்காக எழுத முடியாத நிலையே ஏற்படும். 02, 03 மணித்தியாலங்கள் சிலபோது அதற்கு மேற்பட்ட கால அளவுகளில் பகுதி பகுதியாக ஒரு நாளில் நடைபெற்று மறுநாளும் தொடரும் பரீட்சைகளை எதிர்கொள்வதற்கு உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் மிக முக்கியமானதாகும்.

அடுத்தது, தன்னம்பிக்கை. நாம் கூடுதலாகக் கற்றிருந்தாலும் குறைவாகக் கற்றிருந்தாலும் பாடத்திட்டம் முழுவதும் பரீட்சையில் எழுத வராது; அவ்வாறு எழுதவும் முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, நான் கற்றதைக் கொண்டு என்னால் பரீட்சை எழுத முடியும் என்ற தன்னம்பிக்கை மிக முக்கியம். இந்த ஆரோக்கியமான தயார்படுத்தல்களே உண்மையில் பரீட்சை நெருங்கும் காலத்தில் தேவையானவையாகும்.

**அகரம்: மாணவர்கள் பாடசாலையில் கற்பதற்கும் பரீட்சைக்கும் உள்ள தொடர்பு என்ன?**

**எம்.எச்.எம். ஹஸன்:** பாடசாலையில் கற்பது என்பது குறிப்பிட்ட ஒரு பாடத்திட்டத்தை மாணவர்களுக்குக் கற்பித்து அவர்களுக்கு அறிவூட்டுவது ஆகும். பரீட்சை என்பது பாடத்திட்டத்தின் இலக்குகளைப் பரீட் சிப்பது ஆகும். இந்த இரண்டுக்கு மிடையிலான வித்தியாசத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாடசாலையில் கற்கும்போது முழுப் பாடத் திட்டத்தையும் முழுமையாகவும் விளக்கமாகவும் மேலதிக விளக்கங்களுடனும் கற்பிப்பர். காரணம் அது அறிவூட்டும் பணி. ஆனால் பரீட்சை என்பது பாடத்திட்டத்தின் இலக்குகள் அடையப்பட்டுள்ளனவா என் பரீட்சிக்கும் சோதனை. எனவே,



**சிறப்பாகவும் வினைத்திறனாகவும் பரீட்சை எழுதுவதே சிறந்த பெறுபேற்றை அடைய வழியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகளில் மாணவர்கள் இத்தகைய சோத னைகளுக்கே உட்படுத்தப்படுகின்றனர்.

பாடசாலையில் கற்கும் முறை வேறு; பரீட்சை கள் எழுதும் முறை வேறு. பாடசாலையில் கற்பதென்பது குறிப்புக்கள் வழங்கி விளக்கமாகக் கற்பதாகும். பரீட்சையை நாம்தான் எழுத வேண்டும். பரீட்சை எழுதும்போது நாம் கற்ற விடயங்களிலிருந்து வினாக்களுக்குரிய விடை யைத் தெரிவு செய்து எழுத வேண்டும்; சரியாக எழுத வேண்டும்.

பாடங்களுக்குக் கற்பது போன்ற முழுமையான பார்வையோடு கற்பது பரீட்சைகளுக்குப் பொருந் தாது. பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியவாறு குறிப்பாகக் கற்க வேண்டும்.

**அகரம்: மாணவர்களின் எல்லாத் திறமைகளுக்குமான அளவீடாக பரீட்சையைக் கருத முடியுமா?**

**எம்.எச்.எம். ஹஸன்:** மாணவர்களின் எல் லாத் திறமைகளையும் அளவிட பரீட்சைகளால் முடியாது. அதேபோல பரீட்சிக்கப்படுகின்ற முறைகளில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தாமல் இருக்கவும் முடியாது. அவ்வாறு பரீட்சிக்கப்படுகின்ற முறைகளில் தவறுகின்றவர்களே சித்தியடையத் தவறியவர்க ளாகக் கணிக்கப்படுவர். அதேவேளை சித்திய டைந்தவர்கள் அனைவரும் மகா கெட்டிக்காரர்க ளுமல்ல; சித்தியடையத் தவறியவர்கள் எல்லாம் திறமையற்றவர்களுமல்ல. பரீட்சை எழுதுவதில் அனைத்து விடயங்களும் தெரிந்திருப்பது மாத்திர மல்ல, குறித்த நேரத்திற்குள் விடையளிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

**அகரம்: மாணவர்களுக்குப் பரீட்சை பற்றிய பயம் உள்ளதே. அதனைக் களைவது எப்படி?**

**எம்.எச்.எம். ஹஸன்:** ஆன்மிக ரீதியான பயிற்சிகள் மூலம் அதனைக் களையலாம். தொழுகை, அல்லாஹ்விடம் துஆ கேட்டல், நன்மையைத் தேடித் தொழுதல், அதிகம் திக்ர் அவ்ராதுகள் ஓதுதல், அல்குர்ஆன் ஓதுதல் போன்ற ஆன்மிக வழிமுறைகளைக் கையாளலாம். உண்மையில் நாம் வேறு வகையில் ஏற்படும் பயத்தைக் களைவதற்கு இவ்வாறான வழிமுறை களைத்தானே கையாள்கிறோம். எனவே, பரீட்சை தொடர்பான பயத்தைப் போக்கவும். இவ்வாறான வழிமுறை உதவுவதோடு நம்பிக்கை யளிக்கும்.



முதலாவது இறைநம்பிக்கை. மற்றையது, தன்னம்பிக்கை. "நான் எத்தனையோ பரீட்சைகள் எழுதியிருக்கிறேன். மாதாந்தம், வருடாந்தம் என்று, ஏன் இதற்கு முன் எத்தனை ஆண்டிறுதிப் பரீட் சைகள் எழுதியிருக்கிறேன்" என்ற தைரியம் மாணவர்களுக்கு வரவேண்டும்.

உள ரீதியான பயம் எமக்குத்தான் நஷ்டமளிக் கும். அதுமட்டுமல்லாது நாம் பயப்படுவதால் எமது உடலும் களைப்படைந்து உள்ளமும் சோர்வ டைந்து போய்விடும். உண்மையில் இதற்குக் காரணம், பயமல்ல; பயத்தினால் வந்த விளைவுகளே! இவையே எம்மை உடல், உள ரீதியாக பாதிப்ப டையச் செய்து சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற் குத் தடையாக அமைகின்றன. எனவே, பயப்படு வதால் எமக்குத்தான் நஷ்டம் என்ற உண்மை யைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எக்ஸாம்போபியா (Examphobia) எனும் 'பரீட்சை பற்றிய பயம்' அக் காலப் பகுதியில் மாணவர் களைப் பீடிக்கலாம். இதனால் எந்தப் பயனும் இல்லை. எனவே, வீணான கற்பனைகளில் பயப் படாது எதையும் எதிர்கொள்வதற்கு தயாரான ஆரோக்கியமான மனோநிலையில் இருக்க வேண்டும்.

**அகரம்: பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள், கையாள வேண்டிய உத்திகள் எவை?**

**எம்.எச்.எம். ஹஸன்:** வினாப்பத்திரம் தரப் பட்டதும் இது உங்களுக்குரிய வினாப்பத்திரம் தானா என்பதை முதலில் பார்க்க வேண்டும். சிலபோது தவறுதலாக பழைய பாடத்திட்டத்திற் குரிய வினாப்பத்திரம் உங்களுக்கு வழங்கப்படலாம்.

வினாப்பத்திரத்தை முதலில் நன்றாகவும் விரைவாகவும் வாசித்து விடையளிப்பதற்கான கேள்விகளை எமக்கு நன்கு தெரிந்தவை, ஓரளவு தெரிந்தவை, குறைவாகத் தெரிந்தவை என்ற அடிப்படையில் குறித்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

பின்னர் நேரத்தை பிரித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தெரிவு செய்த வினாக்கள்தான் பரீட்சையில் உங்களிடம் வினவப்பட்ட வினாக்கள் என நினைத்து மற்ற வினாக்களை மறந்துவிட வேண்டும். அவ்வாறல்லாமல் வினாக்களை மீண்டும் மீண்டும் வாசித்து நேரம் இழக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், பரீட்சையில் நேரம் என்பது மிக முக்கியம்.

இவ்வாறு விடைகளைத் தெரிவு செய்யும் போதே ஏதாவது விடயங்கள், தகவல்கள் ஞாபகம் வந்தால் அதனை உடனுக்குடன் குறித்துக் கொள்ள வேண்டும். மேலும் நேரத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும். விடையெழுதி முடிந்த பின்னர் மேலதிகமாக 10 நிமிடங்களை ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் விடைகளை எழுதும்போது புதிய பக்கத்தில் ஆரம்பிக்க வேண்டும். இறுதியாக பக்கங்களை சரிபார்த்து திருத்துபவருக்கு இலகுவாக விளங்கக் கூடியவாறு விடையெழுத வேண்டும்.

விடை எழுதும்போது நீண்ட விடைகளை எழுதாமல் குறிப்பாக சிறப்பாக சுருக்கமாக எழுத வேண்டும். திருத்துபவர் விடைகளைத் தேடி எடுக்க வேண்டிய தேவையில்லாமல் பார்த்தவுடன் விடை தெரியும் விதமாக விடைகளை அமைக்க வேண்டும். விடைகளின் ஆரம்பம் அழகாக அமைய வேண்டும்; அதேபோல் முடிவும் சிறப்பாக இருக்க வேண்டும்.

**அகரம்: பொதுவாக வழமையாக வரும் வினாக்களுக்குக்கூட மாணவர்கள் சரியாக விடையளிக்கத் தவறிவிடுகின்றனர். இதற்கான காரணம் என்ன?**

**எம்.எச்.எம். ஹஸன்:** மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராவதில்லை. மாறாக, வெறுமனே பாடத்திட்டத்தை வாசிக்கின்றனர். வெறுமனே வாசிப்பதால் பரீட்சையில் சிறப்பாக பதிலளிக்க முடியாது.

மாணவர்கள் கற்கும்போதே வினாக்களுக்கு விடைதேடிக் கற்க வேண்டும். வினாக்களுக்கு வடிவம் உள்ளது போலவே விடைகளுக்கும் வடிவம் உண்டென வைரமுத்து கூறியதற்கேற்ப நாம் விடைகளுக்கும் வடிவம் கொடுத்துப் படிக்க வேண்டும். சிலபோது வினாக்களின் உப பகுதிகள் விடை எழுதப்படாமல் தவற விடப்படலாம். அதுவே புள்ளிகளை இழக்கக் காரணமாக அமைந்து விடும்.

பரீட்சை எழுதுவதற்கென நேரம் ஒதுக்கித் தயாராக வேண்டும். பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்தவர்களிடம் நீங்கள் கேட்டுப் பார்த்தால் தெரியும், அவர்கள் பெரும்பாலும் பாடசாலையிலும் மேலதிக வகுப்புகளிலும் கற்றது போக வீட்டில் சுயமாகக் கற்றலில் ஈடுபடுவது அதிகமாக இருந்திருக்கும். அவ்வாறு கற்கும்போது விடைகளை எழுதிப் பார்த்து கற்றதும் அவர்களால் பரீட்சையில் சிறப்பாக விடையளித்து சித்தியடையக் காரணங்களாக அமைந்திருக்கும். முடிந்தால் நீங்கள் எழுதிய விடைகளை ஆசிரியரிடம் கொடுத்து திருத்திப் பாருங்கள்.

**அகரம்: க.பொ.த (சா.த) இன் பின்னர், க.பொ.த (உ.த) இல் உரிய துறையைத் தெரிவு செய்வது எப்படி?**

**எம்.எச்.எம். ஹஸன்:** க.பொ.த (சா.த) பரீட்சை எழுதிய பின்னர் மிக முக்கியமான விடயம், மாணவர்கள் தமது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதாகும். ஏனெனில், சா.த பரீட்சையின் பின்னர் கிடைக்கின்ற 04 மாத கால ஓய்வு மிகவும் பயனுள்ளதும் மிக முக்கியமானதுமான காலப் பகுதியாகும். ஏனெனில், இதற்கு முன்னரும் இவ்வாறான ஓய்வு கிடைத்திருக்காது; உ.த ஆரம்பித்து விட்டாலும் இத்தகைய சந்தர்ப்பம் கிடைக்காது. எனவே, கிடைத்தற்கரிய சந்தர்ப்பத்தை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வது அறிவுடமையாகும். பொதுவாக மாணவர்கள் தமது ஆங்கில மொழித்திறன், கணினி அறிவு என்பவற்றை விருத்தி செய்ய முயற்சிக்கலாம்.

க.பொ.த (சா.த)இல் கற்பதற்கும் க.பொ.த (உ.த)இல் கற்பதற்கும் இடையில் உள்ள இடைவெளி வித்தியாசத்தை மாணவர்கள் சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். மாணவர்கள் க.பொ.த (சா.த) இல் கற்ற பொதுக் கல்விக்கும் உயர்தரத்தில் விஷேட துறையைத் தெரிவு செய்து கற்பதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இடைவெளி இணைப்பு பாடநெறிகள் (Bridge Class) நடைபெறுகின்றன. அதாவது (சா.த) க்கும் (உ.த) க்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை விளக்கி அதனை நிவர்த்தி செய்யும் பாடநெறியே இதுவாகும். இதில் (சா.த) இல் கற்ற விடயங்களுக்கு மேலாக உயர்தரத்தில் கற்க வேண்டிய விடயங்களுக்கு அறிமுகமும் அதன் அடிப்படைகளும் போதிக்கப்படுகின்றன.

உண்மையில் (சா.த)க்கும் (உ.த)க்கும் இடையிலுள்ள இடைவெளியை நீக்கி அவர்களை (உ.த)க்கு தகுதியானவர்களாக மாற்றுவதே இந்த இணைப்புப் பாடநெறியாகும். சிலர் (சா.த) முடிந்த உடனேயே (உ.த) வகுப்புகளுக்குச் செல்கின்றனர். அதனை விட இது மிகவும் பயனுள்ளதாகும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் 10,11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எஸ்.எம்.ஏ. ஸலாம், மாவனல்லை

க.பொ.த (சா/த) கணித பாட வினாத்தாள்களில் மாணவர்கள் அட்சரக் கேத்திர கணிதப் பகுதிகளைப் புறந்தள்ளிவிட்டு ஏனைய வினாக்களிலேயே அதிக கரிசனை காட்டுவது அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் உயர்கணிதம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அரிதாகி வருவது உண்மையே ஆகும்.

எனவே, முடிந்தளவு அதற்கான சிறு பங்களிப்பினை வழங்கும் அகரம் மூலம் மாணவர்கள் பயன்பெறுவர் என எதிர்பார்த்து சில வினாக்களையும் வழிகாட்டல்களையும் இவ்விதழில் சேர்த்துள்ளோம். சற்று பயிற்சி செய்யும் மாணவர்கள் அவற்றின் இலகுதன்மையைப் புரிந்து கொள்வர் என நம்புகிறோம்.

### காரணிப்படுத்துக.

*1)* $x^2 - x$

இங்கு பொதுக் காரணியாக $x$ ஐப் பெறமுடியும். ஆகவே, $x^2 - x = x\ (x-1)$

*2)* $ax^3 - ax$ இங்கு பொதுக் காரணியாக $ax$ ஐ பெறலாம்.

ஆகவே,
$$ax^3 - ax = ax(x^2-1)$$
$$= ax(x^2-1^2)$$
$$= ax(x+1)(x-1)$$

இவ்வினாவில் இருவகை காரணிப்படுத்தல் வழிமுறைகள் உள்ளன.

*1.* பொதுக் காரணியைப் பெறல்

*2.* வர்க்க வித்தியாச முறையைப் பயன்படுத்தல்

*3)* $2x^3+16y^3 = 2(x^3+8y^3)$
$$= 2\left[x^3+(2y)^3\right]$$
$$= 2\left[(x+2y)\ (x^2-2xy+4y^2)\right]$$

இங்கு 2 பொதுக் காரணியாகவும்

$a^3+b^3 = (a+b)\ (a^2-ab+b^2)$ எனும் கன வடிவம் பின்பற்றப்படுவதையும் அவதானியுங்கள்.

☞ $8y^3 = (2y)^3$ என்பதை இங்கு பயன்படுத்துகிறோம்.

*4)* $x^2-xy-2y^2$ இக்கோவையானது ஒரு மூவுறுப்புக் கோவையாகும்.


$$x^2-xy-2y^2 = x^2-2xy+xy-2y^2$$
$$= x(x-2y)+y(x-2y)$$
$$= (x-2y)(x+y)$$

*5)* $x^2-2xy+y^2$ இக்கோவையானது ஒரு நிறைவர்க்க கோவை ஆகும்.


$$x^2-2xy+y^2$$
$$= x^2-xy-xy+y^2$$
$$= x(x-y)-y(x-y)$$
$$= (x-y)(x-y)$$
$$= (x-y)^2$$

*6)* $a^3-a^2-2a-ax-x$
$$= a(a^2-a-2)-x(a+1)$$
$$= a(a-2)(a+1)-x(a+1)$$
$$= (a+1)\left[a(a-2)-x\right]$$
$$= (a+1)(a^2-2a-x)$$

### கேத்திர கணிதம்




*1)* a. உருவை அவதானித்தும் தரவுகளைப் பயன்படுத்தியும் y இன் பெறுமானத்தை x இல் தருக. (பைதகரஸ் விதியைப் பயன்படுத்துக)




b. ABC இல் $\hat{C}$ விரிகோண மாகும்.

i. $\Delta ABX$ இல் $AB^2$ ஐ ஏனையவற்றில் தருக.


ii. $\Delta ACX$ இல் $AC^2$ ஐ ஏனையவற்றில் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. $BX=BC+CX$ என்பதை அவதானித்து வினா i இல் பெற்ற தொடர்பின் மூலம் $AB^2=AC^2+BC^2+2BC\ CX$ எனக் காட்டுக.

*2)* உருவைப் பிரதி செய்க.




i. PQRS இன் விஷேட பெயரை எழுதுக.

ii. $\hat{Q}+\hat{S}$ இன் பெறுமானத்தை பாகைகளில் தருக.

iii. $\hat{Q}+\hat{R}$ இன் பெறுமானத் தை பாகைகளில் தருக.

iv. ii, iii என்பவற்றை அவதானித்து $\hat{S}=\hat{R}$ என காட்டுக.

v. PS,QR என்பவற்றை நீட்டி அவை சந்திக்கும் புள்ளியை X என குறிக்க.


vi. $X\hat{S}R=X\hat{R}S$ எனக் காட்டுக.

vii. $XS=XR$ எனக் காட்டுக.

viii. $XP=XQ$ எனக் காட்டுக.

ix. மேலே பெற்ற முடிவுகளிலிருந்து $PS=QR$ எனக் காட்டுக.


*3)*




i. $A\hat{B}C$ ஐ கணிக்க.

ii. X ஐக் கணிக்க

*4)* வட்டத்தினுள் உள்ள சமாந்தரக் கோடுகளை அவதானித்து




i. $A\hat{C}B$ ஐ பாகைகளில் தருக.

ii. ACஐ வட்டத்தின் விட்டம் எனக்காட்டுக.

iii. $AB=AF$ எனக்காட்டுக.

iv. ABCD ஒரு செவ்வகம் எனக் காட்டுக.

## கேத்திர கணிதப் பகுதி

*1)* a) $x^2+x^2=a^2$

$\therefore a^2=2x^2$ (பைதகரஸ்)

இதேபோல் $a^2+a^2=y^2$

$\therefore y^2=2x^2$

ஆனால் $a^2=2x^2$

$y^2=2(2x^2)$

$y^2=4x^2$

$y=\sqrt{4x}$

$y=2x$

b) $\Delta ABX$ இல்

i. $AB^2=AX^2+BX^2$

ii. $\Delta ACX$ இல்

$AC^2=AX^2+CX^2$

iii. $BX=BC+CX$

$\therefore$ i) இல் $AB^2=AX^2+(BC+CX)^2$

$=AX^2+BC^2+BC.\ CX+\underline{CX}^2$

$=AX^2+\underline{CX^2}+BC^2+BC.\ CX$

ஆனால், ii) இல் $AX^2+CX^2=AC^2$

$\therefore AB^2=AC^2+BC^2+BC.\ CX$

2) i. PQRS ஒரு வட்ட நாற்பக்கல் (சரிவகமாக அமைந்தது)


ii. $\hat{Q}+\hat{S}=180^0$ (வட்ட நாற்பக்களின் எதிர்க்கோணங்கள்)

iii. $\hat{Q}+\hat{R}=180^0$ (நேயக் கோணங்கள்)

iv. $\hat{Q}+\hat{S}=\hat{Q}+\hat{R}=180^0$

$\therefore \hat{S}=\hat{R}$

v.




vi. $X\hat{S}R+P\hat{S}R=180^0$

$X\hat{R}S+Q\hat{R}S=180^0$

$\therefore X\hat{S}R+\underline{P\hat{S}R}=X\hat{R}S+Q\hat{R}S$

ஆனால் vi இல் $\underline{\hat{S}}=\underline{\underline{\hat{R}}}$

$\therefore X\hat{S}R=X\hat{R}S$

(35ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.எம். அஸீம்

# ஸ்டீவ் ஜொப்ஸ்

## ஒரு ஜீனியஸின் வாழ்க்கைக் குறிப்பு



***“பெரும்பாலும் எதிர்பார்ப்புகள், புகழ், தோல்வி பற்றிய பயம் எதுவுமே மரணத்தின் முன் நிற்பதில்லை; வாழ்வில் எது முக்கியமோ அது மட்டுமே நிலைக்கிறது.”***

**ஜீனியஸ்** என்றால் புதிதாக எதையாவது சாதித்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்துவர். புத்தாக்கத் திறன், அறிவார்ந்த திறமைகள், அபூர்வமான ஆற்றல்கள் மூலம் ஏனையவர்கள் அடைய முடியாத இலக்கை அடைந்து மக்களால் வியப்போடு பார்க்கப்படுவர்களே இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். நியூட்டன், தோமஸ் அல்வா எடிசன், அல்பர்ட் ஐன்ஸ்டைன் ஆகியோரை உதாரணமாகக் கூறலாம்.

ஸ்டீவ் மறைந்தபோது அனைத்து ஊடகங்களும் அவருக்கு அஞ்சலி செலுத்திய வரிகளில் குறிப்பிட்ட வார்த்தை “அவர் ஒரு ஜீனியஸ்”. 21ம் நூற்றாண்டின் ஜீனியஸுக்கு முழு உலகமும் மரியாதை செலுத்தியது.

உலகில் வெற்றிக்கான விதிகளும் தோல்விக்கான விதிகளும் இருக்கின்றன. வெற்றிக்கான விதிகளை நீங்கள் பின்பற்றும்போது நீங்கள் வெற்றியாளராகலாம். தோல்விக்கான விதிகளில் சிக்குண்டு போகின்றபோது தோல்வியில் துவண்டுவிடுவீர்கள். 21ம் நூற்றாண்டின் சாதனையாளர் ஸ்டீவ் இன் ஜீனியஸ் பண்புகள் சிலவற்றை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம். அவரின் வெற்றிப் படிக்கட்டுக்களை நீங்களும் பரீட்சித்துப் பாருங்கள்.

### புத்தாக்கம்

***"புதுமை என்பது ஆயிரம் பொருட்களை புதிய முறையில் உற்றுநோக்கி சிந்திக்கும் போது உருவாகிறது."***

***ஸ்டீவ் ஜொப்ஸ்***

கல்லூரிப் படிப்பை முடிக்க முடியாமல் இடைநடுவே கைவிட்ட ஸ்டீவ் ஜொப்ஸுக்கு கைகொடுத்தது அவரது புத்தாக்கத் திறமை. அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளரும்

(26ஆம் பக்கம் பார்க்க)

ஸ்டீவ் ஜொப்ஸ், 1955 பெப்ரவரி 24ல் சன்பிரான்சிஸ்கோ நகரில் பிறந்தார். இவரது பெற்றோர் அப்துல் பத்தாஹ் அல்ஜன்தலி- ஜோனா சிப்பெல். ஜொப்ஸ் பிறந்தபோது அவர்களிருவரும் திருமணம் முடித்திருக்கவில்லை. எனவே, பிறந்து ஒரு வாரத்தில் ஜொப்ஸ்- கிளாரா என்ற தம்பதியினருக்கு அவர் தத்துக் கொடுக்கப்பட்டார்.


1972 கலிபோர்னியாவிலுள்ள ஹோம்ஸ்டெட் மேல்நிலைப்பள்ளியில் கற்றார். பின்பு இந்தியா சென்று புத்த மதத்தைத் தழுவினார். நாடு திரும்பிய ஸ்டீவ், ஒரிகன் மாநிலத்திலுள்ள ரீட் கல்லூரியில் பட்டப் படிப்பில் இணைந்தார். ஏழ்மை காரணமாக கல்லூரியைக் கைவிட்டு கம்பனியைக் கைப்பிடித்தார். பின்னர் கணினியைக் கரம் பற்றினார்.

1976ல் அவரது கல்லூரி நண்பரான ரொனால்ட் வொய்ன் மற்றும் ஸ்டீவ் வோஸ்னியாக் உடன் சேர்ந்து அப்பிள் கம்யூட்டரை வடிவமைத்தார். 1984 மகிண்டோஷ் என்ற கணினியை கண்டுபிடித்தார். 1985 அப்பிளிலிருந்து ஜொப்ஸ் வெளியேற்றப்பட்டார். அதே ஆண்டு அமெரிக்க அரசின் ‘தொழிநுட்பத்திற்கும் புதுமையாக்கத்திற்குமான விருதை வென்றார். 1986ல் நெக்ஸ் (NeXT) மற்றும் பிக்சர் (Pixar) நிறுவனங்களை ஆரம்பித்தார். பின்னர், அனிமேஷன் படத்திற்கான ஒஸ்கார் விருது உட்பட பல விருதுகளை வென்றார். மீண்டும் அப்பிளில் இணைந்து, 1997ல் ஐமேக் என்ற டெக்ஸ் டொப் கம்யூட்டரை வெளியிட்டார். 2001ல் ஐபேட், ஐபோன் என்று தொடர்ந்த சாதனை படைத்த ஸ்டீவ், 2011 ஒக்டோபர் 06ம் திகதி மரணமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கதைகள்:



## வாழ்வை மாற்றிய யதார்த்தம்

**அப்பிள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருந்த ஸ்டீவ் ஜொப்ஸ், சிறந்த பேச்சாளர். 2005ம் ஆண்டு ஜூன் 12ம் திகதி கலிபோர்னியாவில் உள்ள ஸ்டேன்போர்ட் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை பலராலும் பாராட்டப்பட்டது.**

நான் கல்லூரியில் பட்டப்படிப்பை முழுமையாக முடிக்கவில்லை. நான் என் வாழ்வில் தொடர்புடைய 03 கதைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### முதல் கதை: புள்ளிகளை இணைப்பது (Connecting the dots)

நான் ரீட் கல்லூரி (Reed College)யில் கற்று ஆறு மாதங்களில் இடைவிலகி விட்டேன். அதன் பின் அங்கு இணைந்து 18 மாதங்களில் விலகினேன். காரணம் நான் பிறக்கும்போது எனது தாய், தந்தையர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தனர். இதனால் என்னை மற்றொருவருக்கு தத்துக் கொடுத்தனர். அவர்கள் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், என்னை குறையின்றி வளர்த்தனர். அப்போது படிப்பை தொடர்வதில்லை என முடிவெடுத்தேன். நண்பர்கள் உதவியுடன் அவர்கள் வீட்டின் தரையில் படுத்தேன்; தேவாலயங்களில் சாப்பிட்டேன். கஷ்டங்கள்தான் என்னுள் இருந்த உள்ளுணர்வையும் தன்னம்பிக்கையும் வளர்த்தன. பத்து ஆண்டு உழைப்பின் பயனாக, மெகின்டோஷ் கம்ப்யூட்டரை வடிவமைத்தேன். எனது முதல் கம்ப்யூட்டர், டைப்போகிராபி (அச்சுக் கலை) கொண்டது.

### இரண்டாவது கதை : காதலும் தோல்வியும் (Love and Loss)

நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. 20 வயதில் நான் வொஸ் உடன் இணைந்து என் வீட்டில் ஆப்பிள் நிறுவனத்தை தொடங்கினேன். 10 ஆண்டு உழைப்பிற்கு பின் 2 பில்லியன் டொலர்களுடன் 4,000 பேரை வேலையில் அமர்த்தியது என் நிறுவனம். நாங்கள் மெகின்டோஷ் (Macintosh) கணினியை அறிமுகப்படுத்தினோம்.

30 வயதில் என்னுள் எழுந்த வெறிக்கு அளவே இல்லை. அப்போது என் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன். அடுத்த ஐந்து ஆண்டுகளில் 'நெக்ஸ்ட்' மற்றும் 'பிக்ஸர்' ஆகிய நிறுவனங்களை தொடங்கினேன். அப்போது தான் என் வாழ்வில் காதல் மலர்ந்தது. பிக்ஸரில் முதல் கம்ப்யூட்டர் அனிமேஷன் சினிமாவான 'டொய் ஸ்டோரி' உருவானது. சில காலம் கழித்து ஆப்பிள் நிறுவனம், நெக்ஸ்ட்டை வாங்கியது. நான் மறுபடியும் புதிய உத்வேகத்துடன் ஆப்பிளில் இணைந்தேன்.

### மூன்றாவது கதை: இறப்பு (Death)

சிறு வயதில் ஒரு வாசகம் எனக்கு ரொம்ப பிடிக்கும். "உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் இறுதி நாளாக நினைத்து வாழ்ந்தால், ஒரு நாள் அது நிறைவேறும்" என்பதே அந்த வாசகம். இதை நான் எப்போதும் கடைபிடிப்பேன். தினமும் காலையில் எழுந்து கண்ணாடியில் முகம் பார்க்கையில் இன்றே நமக்கு இறுதி நாள் என்று நினைத்துக் கொண்டு வேலைகளைத் தொடங்குவேன். கடந்த ஆண்டு எனக்கு புற்றுநோய் இருப்பது, பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது நான் நலமாக உள்ளேன். ஆனால், எனது வாழ்நாள் இறுதிக் கட்டத்தை நோக்கி செல்வது எனக்குத் தெரியும்.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைவு; அதை வீணாக்காதீர்கள். மற்றவர்கள் கூறிய கருத்துகளை வேதவாக்காகக் கொண்டு, வாழ்க்கையை நிர்ணயிக்காதீர்கள். உள்ளுணர்விற்கு மதிப்பளியுங்கள்; அது நீங்கள் என்னவாக வர வேண்டும் என்பதை அறியும். பசியோடு இருங்கள்; புதிய சிந்தனைகளோடு வாழுங்கள்."

**உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமுன்னேற்றவியலாளருமான நெப்போலியன் ஹில், ''புதிது புதிதாக சிந்தியுங்கள். உலகம் உங்களிடமிருந்து புதிது புதிதாகவே எதிர்பார்க்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## கவனக் குவிப்பு

*"கவனக் குவிப்பும் இலகுபடுத்தலும்தான் எனது மந்திரமாக இருந்தது. இலகுபடுத்தல் என்பது ஒன்றை சிக்கலாக்குவதைவிட கஷ்டமானதான இருக்கலாம். ஆனால் உங்கள் சிந்தனையைத் தெளிவாக்கி நீங்கள் கடினமாக வேலை செய்தால் எதையும் உங்களுக்கு இலகுபடுத்தலாம். இறுதியில் அது பெறுமதியானதாக மாறும்; அவ்வாறு உங்களால் செய்ய முடியுமென்றால் மலைகளையும் நீங்கள் நகர்த்தலாம்."* ஸ்டீவ் ஜொப்ஸ்

## இலகுபடுத்தல்

''எதையும் மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் செய்வதல்ல திறமை, மற்றவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளும் விதமாக செய்வதே திறமை, ஆற்றல்.''

இந்த வரிகளுக்கு விளக்கமாக அமைந்தவர்தான் ஸ்டீவ் ஜொப்ஸ். அப்பிள் கணினிகளும் ஐபோன்களும் ஐபொட்களும் இலகுவான முறையில் கையாளக்கூடியவாறும் மனதை ஈர்க்கும் வசதிகளுடனும் உருவாக்கப்பட்டதால்தான் அவை ஆடம்பரப் பொருட்களாக மட்டுமன்றி, தமது நாளாந்த செயற்பாடுகளை இலகுவாக்க விரும்புவோர் நாடும் இலத்திரனியல் பொருட்கள் ஆயின.

## மக்களுக்கு உகந்ததை உதவுவதைக் கொடுங்கள்

*"உலகத்திற்குக் கேடு விளைவிக்காமல் புதிய தொழிநுட்பங்களைக் கொண்டு பொருட்களை உருவாக்கி மனிதர்களின் வாழ்வை செழிப்பாக்குங்கள்."* ஸ்டீவ் ஜொப்ஸ்

மற்றவர்களின் சிந்தனைகளுக்குள் நீங்கள் சிறைப்பட்டிருக்காதீர்கள். மக்களுக்கு உகந்ததாகவும் உதவுவதாகவும் உங்களால் மனித குலத்திற்குப் பங்களிக்க முடியுமென்றால் அத்னைச் செய்யுங்கள். தொழிநுட்பத்தை அழிவுக்குப் பயன்படுத்தாமல் ஆக்கத்திற்குப் பயன்படுத்தி அற்புதம் புரிந்தவர் ஜொப்ஸ். மக்கள் எவ்வாறெல்லாம் எதிர்பார்க்கிறார்கள் என்று அறிந்து அவர்களுக்கேற்ப வழங்கினார்; அப்பிள் வளர்ந்தது.

## தன்னம்பிக்கையும் துணிவும்

*"கஷ்டங்கள்தான் என்னுள் இருந்த உள்ளுணர்வையும் தன்னம்பிக்கையும் வளர்த்தன."* ஸ்டீவ் ஜொப்ஸ்

தன் கல்லூரிப் படிப்பைத் தொலைத்த ஜொப்ஸ், தன்னம்பிக்கையையும் துணிவையும் தொலைக்கவில்லை. வறுமையோடு போராடினார்; உழைத்தார். குறுகிய காலத்திற்குள் தான் உருவாக்கிய அப்பிள் கம்பனியிலிருந்து வெளியேற்றப்பட்டவர், தோல்வியோடு போராடினார்; சிகரம் சென்றார். அவரது அடுத்த முயற்சிக்கு நெக்ஸ்ட் எனப் பெயரிட்டார். பிக்சர் நிறுவனத்தை உருவாக்கி மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்கினார். அதனது வளர்ச்சியைக் கண்ட அப்பிள் அந்தக் கம்பனியையே வாங்கி ஜொப்ஸை தன்னோடு இணைத்துக் கொண்டது. தளராத முயற்சியால் தடைதாண்டி சாதித்தார்.

## தினமும் எதையாவது சாதியுங்கள்

*"உலகில் கோடீஸ்வரனாக சமாதிக்குச் செல்வது ஒரு பெரிய விடயமல்ல; தினமும் இரவில் தூங்கச் செல்லும் முன் நான் இன்று ஏதாவது அற்புதமாக செய்துள்ளேனா என்பதுதான் என்னைப் பொறுத்தவரை முக்கியமான விடயம்."* ஸ்டீவ் ஜொப்ஸ்

அனுதினமும் எதையாவது சாதித்து புதிது புதிதாகக் கண்டுபிடித்த ஸ்டீவ் கனவு கண்டுவிட்டுத்தான் தூங்குவார்; அல்லது கண்ட கனவை நனவாக்கிவிட்டுத்தான் தூங்குவார். ஆனால் நாம் தூங்கினால் கனவு காண்போம்; கனவு கண்டால் கண் விழிப்போம். தினமும் நாள் முடியும்போது தனது நாட்குறிப்பில் நான்கு வரிகளாவது சாதனையையும் சோதனையையும் வரைந்தவர், மாதாந்த சம்பளமாக ஒரே ஒரு டொலரைத்தான் பெற்றார் என்பது ஆச்சரியமளிக்கலாம். ஆனால் அவர் சமாதிக்கு டொலர் கொண்டுபோவதை விட கட்டிலுக்கு சாதனையைக் கொண்டு போகவே விரும்பினார்.

## பேச்சாற்றல்

அப்பிள் கம்பனியின் பொருட்கள் சந்தையில் நன்கு விலைபோக அவற்றை அறிமுகப்படுத்தும் மேடைகளுக்கு காத்திரமான பங்குண்டு. அந்த மேடைகளில் தோன்றி ஜொப்ஸ் தன் கண்டுபிடிப்புக்களை காட்சிப்படுத்தும் விதமோ அற்புதம்! அவையிலுள்ளோரை ஈர்க்கும் விதமாகப் பேசுவார். அத்னை அவர்கள் வியந்து கேட்டுக் கொண்டிருப்பர். இது தொடர்பான வீடியோ காட்சிகளை நீங்கள் யூடியூபில் கண்டுகளிக்கலாம்.

## போட்டி மனப்பாங்கு

சாதிப்பதென்றால் சாதாரண விடயமா? அன்றைய கம்ப்யூட்டர் ஜாம்பவான்களாக டெல், பில் கேட்ஸ்களோடு போட்டி போட்டார் ஜொப்ஸ். தோல்விக்கு மேல் தோல்வி. தன் அப்பிள் நிறுவனத்திலிருந்தே வெளியேற்றப்பட்டார். வெளியேறியதும் அப்பிளுக்கு அடுத்த சவாலாக நெக்ஸ்டைக் கொண்டுவந்தார். சவாலை சமாளிக்க முடியாமல் நெக்ஸ்டை வாங்கியது அப்பிள்.

இத்தகைய ஜீனியஸ் பண்புகளை பெற்றிருந்த ஸ்டீவ் அப்பிள் உற்பத்திகளை உலகின் முதற்தரமாக்கினார். அவற்றை நீங்களும் பயிற்சி செய்து பாருங்கள். நீங்களும் சாதிக்கலாம். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

திருமதி என்.எஸ். நஸ்ரா நிஸாம்தீன்
B.A.(Hons) PGDE

மாணவர்களே!

'விடியுமா' என்னும் சிறுகதை உங்களது பாடப் பரப்பை அழகு செய்கின்ற பகுதி. இப்பகுதியிலிருந்து சிறு வினாக்கள் மட்டுமன்றி பெரிய கேள்விகளும் க.பொ.த (சா/த) பரீட்சையில் வருவது நீங்கள் அறிந்த விடயம். இம்மாத கற்றலை இவ்வகை வினாக்களுக்கு நீங்கள் சிறப்பாக முகம் கொடுக்க இலகுவான முறையில் தருகின்றோம். கற்றுப் பயன் பெறுங்கள்.

### விடியுமா?

வினாக்கள்

01. 'விடியுமா?' சிறுகதையை எழுதியவர் யார்?
02. இக்கதையின் தலைப்பு பொருத்தப்பாடுடையதா? ஏன் அவ்வாறு கருதுகிறீர்கள்?
03. இக்கதையின் மையக் கருத்து யாது?
04. விடியுமா? சிறுகதையில் நடமாடும் பாத்திரங்கள் எவை?
05. இக்கதையில் இனங்காணத்தக்க மக்களின் வழக்காற்றியல் (வாழ்வியல்) அம்சங்களைக் கூறுக.

### விடை தெரியுமா? இதோ விடை...

01. விடியுமா? சிறுகதை ஆசிரியர்- கு.ப. ராஜகோபாலன்.

02. இக்கதையின் தலைப்பு பொருத்தமான மகுடமே. சிவராமையருக்கு என்ன நடந்திருக்கும் என்று விடியலுக்குள் ஒரு முடிவு கிடைத்துவிடும். 'அவராக இருக்காது' தந்தி அவரே அடித்திருப்பாரோ' என்றவாறு குஞ்சம்மாள் தவிப்பதற்கான தெளிவும் இரவோடு இரவாக தொடர்ந்த இரயில் பயண முடிவில் விடியல் கண்டதும் நிலைவரம் புரிதலும் கலக்கம் நீங்குதலுமான நிகழ்வின் சித்திரிப்பு இக்கதையின் தலைப்புக்கு அணி சேர்க்கிறது.

03. இக்கதையின் மையக்கருத்து (ஆசிரியர் கூற விழைந்த விடயம்)

♦ குஞ்சம்மாள் என்னும் பெண் பாத்திரத்தின் மனப் போராட்டமே இக்கதையாகும்.

♦ கரம் கிட்டிய தந்தியை மனதால் ஏற்றுக் கொள்ள முடியாமலும் ஏற்காதிருக்க முடியாமலும் குஞ்சம்மாளும் அவளது தம்பியும் தவிக்கும் அகத் தவிப்பையே ஆசிரியர் அழகாகக் காட்சிப்படுத்துகிறார்.

### 04. பாத்திரங்கள்

i. குஞ்சம்மாள் ii. குஞ்சம்மாளின் தாய்
iii. குமாஸ்தா iv. குஞ்சம்மாளின் தம்பி

### 05. வாழ்வியல் அம்சங்கள்

- மஞ்சள் துணியில் காணிக்கையை முடிந்து வைத்தல்.
- சோதிடம் பார்த்தல். (கிரகம் பார்த்தல்)
- வெற்றிலை, பூ, பாக்கு, மடி நிறையக் கொடுத்தல். (பயணத்தின்போது)
- பயணம் ஆரம்பிக்க வாசலில் சகுனம் பார்த்தல். (நிறைகுடம் நல்ல சகுனமெனல்)

### இன்னும் சில வினாக்கள் விடைகளுடன்...

06. 'குஞ்சம்மாள்' என்ற பாத்திரத்தின் குணவியல்புகளை விளக்குக.

கணவனின் இன்னல்களை பொறுத்துக் கொண்டு அவருடன் பாசமாய் வாழத்துடிக்கும் குடும்பத் தலைவியே குஞ்சம்மாள்.

பதிபக்தி மிக்கவள். தாய்வீட்டுக்கு வந்து உறவுகளுடன் இனிது உறவை வளர்க்கும் சுபாவம் உடையவள். அவ்வாறு வந்த சமயத்திலேயே 'சிவராமையர் டேஞ்ஜரஸ்' என்ற தந்தி சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறது. துடிதுடித்துப் போகிறாள். பூவும் பொட்டும் நிலைக்க வாழும் குடும்பப் பெண்ணிவள். தந்தியை கண்டதிலிருந்து பரிதாபமாக தோன்றுகிறாள். தம்பியின் ஆறுதல்களில் சில நிமிடம் மன அமைதி கண்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுக்குள் புழுவாய் துடிக்கிறான். இரயிலில் பூ தந்த பெண்ணின் வடிவில், "மகாலட்சுமி போல இருக்கீங்கம்மா! ஒங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது" என தெய்வமே வந்து கூறுவது போல எண்ணி சிறுகணம் மகிழ்வதாக வஞ்சகமற்ற பெண்ணாக திகழ்கிறாள் குஞ்சம்மாள்.

இன்னும் கூந்தல் நிறைய பூச்சூடி அழகாக இருப்பவள். வெற்றிலை போடும் பழக்கமுடைய வள். கலகலப்பு கொண்ட பெண்ணாக இக்கதை யில் மிளிர்கிறாள் குஞ்சம்மாள்.

## 07. இக்கதையின் மொழிநடைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

சிறு வாக்கியங்கள், அர்த்தங்கள் பொதிந்த சொற் சேர்க்கைகள், அழகும் எளிமையும் அணிநயமும் கொண்ட வரிகள்.

- ஓங்கித் தலையில் அடித்தது போல குஞ்சம் மாள் பிரமை தட்டிப்போய் உட்கார்ந்திருந் தாள்.
- குஞ்சம்மாள், இயந்திரம் போலச் சொன்ன தையெல்லாம் செய்தாள்.
- "ஒரு வேளை அப்படி இருக்குமோ?" என்று கேட்ட பொழுது குஞ்சம்மாள் முகம் கொஞ் சம் மலர்ந்து விட்டது.
- மனத்தில், ஆழத்தில் பீதி அது பாட்டிற்குப் புழுப்போலத் துளைத்துக் கொண்டே இருந் தது. மேலே மட்டும் சமாதானம் கொஞ்ச நேரத்திற்கு...
- ...எங்கேயோ சென்னையில் விடியப் போகும் ஒரு காலையை நோக்கிக் கனவேகமாக...
- துக்கத்தில் தலையெடுக்கும் தைரியம் போலத் தொலை இருளில் அந்த ஒளித்தொடர்...
- "இதோ ஆயிற்று, இதோ ஆயிற்று" என்று சொல்லுவது போல வண்டி தாவிப் பறந்து கொண்டிருந்தது.
- துக்கத்தில், நித்திரையும் நினைவு மறதியும் சேர்ந்துதான் வாழ்க்கைக்கு ஒரு சிறு போதை யாகித் தாபத்தைத் தணிக்கின்றனவோ?
- சுகமோ துக்கமோ எந்த நிலைமையிலும் நீடிக்க முடியாது.

- ஆங்கிலச் சொற்கள்- ஆபீஸ், ஸ்டேஷன்
- வடமொழிச் சொற்கள்- ஜலம், ஜோதிடம்
- பேச்சு வழக்குச் சொற்கள்- எங்கிட்டு, ஒண்ணும்
- கதைக்கேற்ற தலைப்பும் முடிவும்

## 08. கு.ப.ராவின் படைப்புகள் பற்றி யாது அறிவீர்கள்?

தமிழகத்தின் ஒப்பற்ற சிறுகதை படைப்பாளரும் 'மணிக்கொடி' எழுத்தாளர் குழுவில் தன் பணியை செவ்வனே ஆற்றியவருமாக கு.பா. ராஜகோபா லன், சிறுகதை, நாவல், கவிதை, சிந்தனைக் கட்டுரை, மொழிபெயர்ப்பு, இலக்கியத் திறனாய்வு, வாழ்க்கை வரலாறு என பல்வேறு துறைகளில் சாதனை படைத்திருக்கிறார்.

ஆண்- பெண் உறவில் காணப்படும் பல்வேறு நுட்பங்களை பல்வேறு கோணங்களில் அணுகி சிறுகதையில் இழையோட விட்டிருக்கிறார். எதைச் சொன்னாலும் மென்மையாகச் சொல்லும் பாங்கை இவரது கதைகளில் காணலாம். ஆற் றாமை, மோகினி, மாயை, புனர் ஜென்மம், கன காம்பரம், திரை, சிறிது வெளிச்சம் முதலிய சிறுகதைகள் மட்டுமன்றி, 'வேரோட்டம்' என்ற நாவலிலும் அகலிகை என்ற நாடகப் படைப்பிலும் இரட்டை மனிதன் போன்ற மொழி பெயர்ப்பு களிலும் இவரது படைப்பின் தனிச்சிறப்பு மிளிர் வதைக் காணலாம்.

## 09. பின்வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறுக.

"நான் இந்த நோன்புக்காக இங்கே தாமதம் செய்யாமல் அப்போதே போயிருக்க வேண்டும்"

i. இக்கூற்று யாரால் கூறப்பட்டது? குஞ்சம்மாளினால்

ii. யாருக்கு கூறப்பட்டது? தம்பிக்கு

iii. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? திடீரென ஏதும் நடந்துவிட்டதற்கான காரணம் ஒன்று மில்லை என்ற தம்பியின் ஐயத்தை தொடர்ந்த குஞ்சம்மாளின் பதிலாக இது அமைகிறது.

"மகாலட்சுமி போல இருக்கீங்கம்மா! ஒங்க ளுக்கு ஒண்ணும் கொறவு வராது"

i. இக்கூற்று யாரால் கூறப்பட்டது? இரயிலில் குஞ்சம்மாளின் அருகில் அமர்ந்திருந்த நகரத்து பெண்மணியால்

ii யாருக்கு கூறப்பட்டது? குஞ்சம்மாளுக்கு

iii. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? பட்டணத் துப் பெண்மணி பூவைக் கையில் கொடுத்த பின் மன ஆறுதலுற்று நடந்த விடயத்தை குஞ்சம்மாள் கூறிய வேளையில்

குறிப்பு: இவ்வாறான சந்தர்ப்பம் கூறல் கேள்விக்கு சிறப்பாக, சிறுகதையில் வருகின்ற சந்தர்ப்பங்களை நினைவு கூர்ந்து கற்றுத் தயாராகுங்கள்.

**மீண்டும் இன்ஷா அல்லாஹ்! புதிய பகுதியுடன் சந்திப்போம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாசிய கடற்கரை விளையாட்டுப் போட்டி 2011

## (South Asian Beach Games - 2011)

Hambantota 2011
1st South Asian Beach Games
"Our sun to shine on you"





சுஜபு ஆஷிக்

***தென்னாசியாவில்*** உள்ள இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு நாடுகள் அரசியல், பொருளாதார, சர்வதேச விவகார நலன்களுக்காக தங்களுக்கிடையில் ஏற்படுத்திக் கொண்ட கூட்டமைப்பின் ஒரு செயற்பாடாகவே இந் நாடுகள் கலந்து கொள்ளும் தென்னாசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டிய இப் போட்டிகள் பிராந்தியத்தில் நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் ஸ்திரமற்ற அரசியல் போன்ற காரணங்களால் ஒத்திப் போடப்படுகின்றன.

இருப்பினும் கடந்த வருடம் 11வது தென்னாசிய விளையாட்டுப் போட்டிகள் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது. இதில் 90 தங்கப் பதக்கங்களைப் பெற்று இந்தியா 11வது தடவையாகவும் முதலிடத்தையும் இலங்கை 16 தங்கப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 105 பதக்கங்களை சுவீகரித்து அதிகூடிய பதக்கங்கள் பெற்ற நாடுகள் தரவரிசையில் இரண்டாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இம்முறை தென்னாசிய நாடுகளின் கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் முதன் முறையாக இலங்கையின் ஹம்பாந்தோட்டை நகரில் ஒக்டோபர் 8 முதல் 14ம் திகதி வரை நடைபெற்றன. இப்போட்டியில் பத்து வகையான விளையாட்டுக்கள் 26 பிரிவுகளில் நடைபெற்றன.

இந் நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவம் ஹம்பாந்தோட்டை கடற்கரை அரங்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. போட்டிகளில் 359 மெய்வல்லுனர்கள் 8 தென்னாசிய நாடுகளிலிருந்தும் கலந்து கொண்டனர். இப்போட்டியானது உலகெங்கிலுமுள்ள சுற்றுலாப் பயணிகளை இலங்கையின்பால் கவர்வதோடு இலங்கையை சர்வதேச அரங்கில் தடம் பதிக்க சிறந்த ஒரு ஊடகமாகவும் அமைந்தது. எட்டு விளையாட்டு மைதானங்கள் மற்றும் வீரர்களுக்கான பயிற்சிக் கூடங்கள் என்பன விஷேடமாக நிர்மாணிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். சுமார் பதினாறு ஏக்கர் பரப்பளவு கொண்ட விளையாட்டுத்திடல் ஹம்பாந்தோட்டை கடற்கரை, நகர பஸ் நிலையம் என்பவற்றை இணைக்கின்றது.

இங்கு கடற்கரை உதைப்பந்து, நீச்சல், கூடைப்பந்து, வலைப்பந்து, கபடி, முக்கோண க்டற்கரைப் போட்டி, கரப்பந்தாட்டம், படகோட்டம், ஆணழகன் போட்டி, குதிரை ஓட்டப் போட்டி ஆகிய விளையாட்டுக்கள் பெருந்திரளான வெளி மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் கரகோசத்துடன் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் கோலாகலமாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. "Our sun to shine on you" உன்னில் பளிச்சிடும் எங்கள் சூரியன் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.


### நாடுகளும் அவை பெற்றுக் கொண்ட பதக்கங்களும்

| தர வரிசை | நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 11 | 9 | 7 | 27 |
| 2 | இலங்கை | 9 | 10 | 9 | 28 |
| 3 | பாகிஸ்தான் | 5 | 2 | 4 | 11 |
| 4 | நேபாளம் | 1 | 2 | 5 | 8 |
| 5 | பங்களாதேஷ் | 1 | 1 | 1 | 3 |
| 6 | மாலை தீவு | 0 | 1 | 2 | 3 |
| 7 | ஆப்கானிஸ்தான் | 0 | 1 | 0 | 1 |
| 8 | பூட்டான் | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 27 | 26 | 28 | 81 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்): சிறுவர்களுக்கான முன்மாதிரி ஆளுமை



**ஹஜ்ஜுப் பெருநாள்** நாம் அனைவரும் சந்தோஷமாகக் கொண்டாடும் ஈகைத் திருநாளாகும். எமக்கு இரு பெருநாட்கள் இருக்கின்றன. அவை வெறுமனே கொண்டாட்டங்கள் மட்டுமல்ல, அவற்றிற்குப் பின்னால் மிகப் பெரிய வரலாற்று நிகழ்வுகளும் பாடங்களும் படிப்பினைகளும் இருக்கின்றன. இந்தவகையில் தியாகத் திருநாளான ஹஜ் எங்களுக்கு சொல்லும் படிப்பினைகள் பல. அதில் சிறுவர்களுக்கு முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க ஓர் ஆளுமை இருக்கிறது. அந்த ஆளுமையின் தியாகமும் சேர்த்தே ஹஜ்ஜின் போது நினைவுகூரப்படுகிறது.

### *இஸ்மாஈல்: சிறுவர்களுக்கான முன்மாதிரி ஆளுமை*

அந்தக் குழந்தை பிறந்ததே அற்புதம்தான். பிறந்த பின்னர், கஃபாவிலே தாயோடு தனிமையில் விடப்படுகிறது; வளர்ந்து சிறுவயதிலேயே அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப தன்னுயிரை அர்ப்பணிக்கத் தயாராகிறது. இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது குழந்தையை அறுத்துப் பலியிடுவதாகக் கண்ட கனவை நனவாக்க தன்னை அர்ப்பணிக்கிறது அக் குழந்தை.

தான் கண்ட கனவை இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) மகன் இஸ்மாஈலிடம் கூறியபோது எவ்விதத் தயக்கமுமில்லாமல் அல்லாஹ்வின் கட்டளைக்கு செவி சாய்க்கிறார்கள். இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அறுத்துப் பலியிடச் செல்லும்போது வழியில் ஷைத்தான் குறுக்கிட்டு அவர்களது மனதில் ஊசலாட்டத்தை ஏற்படுத்த முயல்கிறான். ஷைத்தானைக் கண்ட அவர்கள் கல்லால் எறிந்து ஷைத்தானைத் துரத்துகிறார்கள்.

மனிதனுக்கும் ஷைத்தானுக்கும் இடையிலான போராட்டம் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டது முதலே ஆரம்பித்து விட்டது. சிறு குழந்தையைக்கூட ஷைத்தான் வழிகெடுக்க முயற்சித்துக் கொண்டேயிருப்பான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, நாம் எப்போதும் ஷைத்தானுடன் போராடுவதற்குத் தயாரான மனோநிலையில் இருக்க வேண்டும். மேலும், எமது உள்ளத்தையும் ஷைத்தானிய வழிகளில் செல்வதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ஜுடைய இந்த சந்தர்ப்பத்தில் சிறுவர்கள் மாத்திரமன்றி அனைவரும் இந்தத் தியாகத்துடன் தம்மை உரசிப் பார்க்க வேண்டும்.

இஸ்மாஈல் (அலை) அவர்களிடமிருந்து கற்க வேண்டிய ஆளுமைப் பண்புகள்

1. தியாகம்
2. இறைகட்டளைக்கு அடிபணிதல்
3. பெற்றோருக்குக் கட்டுப்படுதல்
4. ஷைத்தானின் தூண்டுதல்களுக்கு ஆளாகாமலிருத்தல்
5. துணிவும் பொறுமையும்

ஒரு மனிதன் தனது வாழ்க்கையின் வெற்றிக்கு இத்தகைய ஆளுமைப் பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சிறுவராக இருந்தபோதும்கூட இத்தகைய ஆளுமைப் பண்புகளை ஆணித்தரமாய்ப் பெற்றிருந்தமை இன்றுவரை நினைவுகூரப்படக் காரணமாக அமைந்தன.

இவ்வாறுதான் நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் சிறு வயதில் பல ஆளுமைப் பண்புகளைப் பெற்றவராக இருந்தார்கள். உண்மை பேசுதல், நம்பிக்கையாயிருத்தல், துணிவு, வீரம் போன்ற ஆளுமைப் பண்புகளைப் பெற்றிருந்தார்கள். எனவே, நாமும் அத்தகைய ஆளுமைப் பண்புகளை எம்முள் வளர்த்துக் கொள்ள திடசங்கற்பம் பூணுவோம், இன்ஷா அல்லாஹ்.

### 1. தியாகம்

பொதுவாக சிறுவர்கள் பெற்றோரிடம் அடம் பிடிப்பவர்களாகவே இருப்பார்கள். தான் கேட்டது கிடைக்க வேண்டும் என்ற ஆசையே அவர்களிடத்தில் மேலோங்கியிருக்கும். ஆனால் இங்கு இஸ்மாஈல் (அலை) அவர்களோ அல்லாஹ்வின் கட்டளைப்படி தனது தந்தையின் வேண்டுகோளுக்காக தனது உயிரைக்கூட தியாகம் செய்ய முன்வருகின்றார்கள்.

### 2. இறைகட்டளைக்கு அடிபணிதல்

தந்தை இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தான் கண்ட கனவை மகனிடம் கூறிய போது, "இது அல்லாஹ்வினுடைய கட்டளையா?" எனக் கேட்டு, "ஆம்" என்றதும் "அப்படியானால் அவ்வாறே செய்யுங்கள்" என்று கூறுகிறார்கள். அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்ட அடியானாக தான் வாழ வேண்டும் என்ற இறையுணர்வு சிறுவயதிலிருந்தே அவர்களிடம் காணப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து இறைவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக வாழ முன்வந்திருக்கும்போது நாம் கடமையான தொழுகைகள் நல்லமல்கள் செய்து அல்லாஹ்வினுடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### 3. பெற்றோருக்குக் கட்டுப்படுதல்

இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தந்தை இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு எவ்வாறு கட்டுப்பட்டு பணிவுடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அவர்களின் வரலாற்றில் காணலாம். நாம் எமது பெற்றோர் எமக்கு ஏவுகின்ற விடயங்களில் எந்தளவு கட்டுப்படுகின்றோம் என்பதை ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் நாம் சிந்திக்க வேண்டும்.

### 3. ஷைத்தானின் தூண்டுதல்களுக்கு ஆளாகாமலிருத்தல்

எமது முதல் எதிரி ஷைத்தானாகும்; அவன் எம்மை வழிகெடுக்கவே முயற்சிப்பான். இஸ்மாஈல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிடுவதற்காக அழைத்துச் செல்லும்போது ஷைத்தான் அவர்களது மனதை மாற்றி வழிகெடுக்க முயற்சிக்கிறான். ஆனால், இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அவனை கல்லெறிந்து துரத்துகிறார்கள். எம்மை வழிகெடுக்க ஷைத்தான் முயற்சிக்கின்றபோதெல்லாம் நாம் அவனது ஊசலாட்டத்திலிருந்து தவிர்ந்திருக்க என்ன முயற்சி செய்துள்ளோம் என்று சிந்திக்க வேண்டும்.

### 5. பொறுமையும் துணிவும்

இளங்கன்று பயமறியாது என்பர். சிறிய வயதில் துணிச்சல் மிக்கவர்களாகவே நாம் இருக்க வேண்டும். இஸ்மாஈல் நபியிடம் அத்தகைய துணிச்சலும் தைரியமும் காணப்பட்டது. அது எங்களுக்குப் படிப்பினையாக அமைய வேண்டும். பொறுமை எனும் பாசறையில்தான் அவர்கள் பிறந்தது முதல் வளர்க்கப்பட்டார்கள். பிறந்ததும் பாலைவனத்தில் தனித்து விடப்பட்டு உணவும் தண்ணீருமின்றி தவித்தவர்களுக்குக் கிடைத்த அற்புதப் பரிசுதான் ஸம் ஸம்.

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, பெற்றோருக்கு மரியாதை செய்து, இப்றாஹீம், இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) ஆகியோரது தியாகங்களை நினைவுகூரும் ஹஜ் பெருநாளாக இனிவரும் பெருநாட்களை கொண்டாட முயற்சிப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சித்திருந்தால் இன்னும் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கலாம்



**ஏ.டபிள்யூ. பாத்திமா நிப்ரா, பொலன்னறுவை அல்றிபாய் முஸ்லிம் ம.வி. இல் கற்று தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற இருவருள் ஒரு மாணவி. ஏ.டபிள்யூ.ஏ. வாஹிட்- ஏ.எச். முஜீபா தம்பதியினரின் புதல்வி.**

**சந்திப்பு: எம்.ஏ. நிம்ஸாத் (இஸ்லாஹி)**

**அகரம்: மாவட்ட மட்டத்தில் முதலிடம் கிடைக்குமென எதிர்பார்த்தீர்களா?**

*நிப்ரா:* கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைவேன் என்று எதிர்பார்த்தேன். ஆனால், மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெறுவேன் என்று எதிர்பார்க்கவில்லை. இப்போது சற்று கவலையைப்படுகிறேன், முயற்சித்திருந்தால் இன்னும் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கலாம்.

**அகரம்: உங்களது இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் என்று எதனைக் கருதுகிறீர்கள்?**

*நிப்ரா:* அல்லாஹ்வின் அருள், எனது பாடசாலையில் எனக்கு அளிக்கப்பட்ட ஊக்கம், பெற்றோரின் ஒத்துழைப்பு, எனது வகுப்பு ஆசிரியையின் வழிகாட்டல் என்பன இவ்வெற்றியைப் பெற்றுக் கொள்ள எனக்கு உதவின.

**அகரம்: நீங்கள் கற்றவற்றை வீட்டில் வந்து கற்பீர்களா?**

*நிப்ரா:* நான் மேலதிக வகுப்புகளுக்கு அதிகம் சென்றதால் வீட்டில் வந்து மீட்டிக் கற்பதற்கான நேரம் குறைவு. ஆனால், கற்றவற்றை வீட்டிலும் மீட்டியிருந்தால் இன்னும் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கலாம் என எண்ணுகிறேன்.

**அகரம்: உங்களது பொழுது போக்குகள் என்ன?**

*நிப்ரா:* ஓவியம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல் என்பன. ஆனால், புலமைப்பரிசில் காலத்தில் இவற்றை சற்றுக் குறைத்து கற்றலில் ஓரளவு கூடிய கவனம் செலுத்தினேன்.

**அகரம்: உங்களது இலட்சியம் என்ன?**

*நிப்ரா:* இன்ஷா அல்லாஹ், நான் ஓர் ஆசிரியையாக வர வேண்டுமென்று விரும்புகிறேன்.


**அகரம்: உங்களது இந்தப் பெறுபேறு மூலம் இலங்கையில் ஒரு பிரபல பாடசாலைக்கு செல்ல முடியும். அவ்வாறானதோர் எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா?**

*நிப்ரா:* இல்லை, அவ்வாறு சென்று கற்கும் போது மேலதிக செலவுகள் ஏற்படும். அதனை ஈடுசெய்யுமளவு எனது பெற்றோருக்கு பொருளாதார ரீதியாக வசதியில்லை. முயற்சித்தால் எமது கிராமப்புற பாடசாலையிலிருந்து கற்றுக் கூட மிகத் திறமையாக சித்தி பெறலாம் என நினைக்கிறேன், இன்ஷா அல்லாஹ்.


**அகரம்: வேறு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

*நிப்ரா:* மாலை நேர வகுப்புகளை மாத்திரம் நம்பியிருக்காது மாணவர்களும் சுயகற்றலில் ஈடுபடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ளலாம், இன்ஷா அல்லாஹ்.


## 2011 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - அல்றிபாய் ம.வி. பொலன்னறுவை




என்.எம். சிஹானி (167)
ஏ.பீ. நவாஸ் மரிக்கார்-
எம். நஜீமா




பீ. சாஹிலா பானூ (155)
ஏ. பதுர்-
ஏ.ஜே. பாத்து முத்து



ஆர். றியாஸ் முஹமட் (153)
ஏ.எச். றிபாய்தீன்-
யூ.எஸ். ஹிதாயா



ஏ.எம். அர்சாத் (151)
என்.எம். அப்துல் மஜீட்-
என்.பீ. ஆசறா பீவி



ஏ. அம்லதுன் நஸீமா (151)
எம்.டீ. அமீன்-
எச். லாபிறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகவீனத்தையும் பொருட்படுத்தாது முயற்சி செய்தேன்

*சந்திப்பு: எம்.ஏ. நிம்ஸாத் (இஸ்லாஹி)*

**ஏ.எஸ். பாதிமா அம்னா, பொலன்னறுவை சுங்காவில் முஸ்லிம் மகா வித்தியாலத்தில் கல்வி கற்று ஐந்தாம் தர புலமைப்பரிசில் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். தந்தை எச்.எம். அப்துல் சுபாரக் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தாய் என்.எம். சம்சுதீன் நஹார் (ஆசிரியை)**



அகரம்: நீங்கள் மாவட்ட ரீதியில் முதலாம் இடம் பெறுவீர்கள் என்று எதிர்பார்த்தீர்களா?

*அம்னா:* அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவேன் என எதிர்பார்த்தேன். ஆனால் பரீட்சைக்கு இரண்டு மாதங்களுக்கு முன் சுகவீனமடைந்து சுமார் ஒரு மாத காலம் பாடசாலைக்குச் செல்லாது ஓய்வு எடுக்க வேண்டிய நிலை எற்பட்டது. இருந்தும் சுகவீனத்தைப் பொருட்படுத்தாது முயற்சி செய்தேன். அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ்வின் அருளால் மாவட்டத்தில் முதலாமிடம் பெற்றுக் கொண்டேன்.

அகரம்: நீங்கள் இவ்வெற்றியைப் பெற உங்களது பெற்றோரின் பங்களிப்பு எவ்வகையில் அமைந்தது?

*அம்னா:* எனது முழு வெற்றிக்குமே எனது பெற்றோரே முக்கிய பங்காற்றினர். வாசிப்புப் பழக்கத்தை எனக்கு ஏற்படுத்தினர். அதிகமான மாதிரி வினாத்தாள்கள் செய்து பயிற்சியளித்தனர். பாடசாலை ஆசிரியர்களிடமும் தேவையான ஆலோசனைகளைப் பெற்று வெற்றி பெற உறுதுணையாக நின்றனர்.

அகரம்: வீட்டில் உங்கள் கற்றல் நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?

*அம்னா:* நான் மாலை நேரம் விளையாடுவது தவிர்ந்த ஏனைய நேரங்களில் கற்றலில் ஈடுபடுவேன். இதற்கு எனது பெற்றோர் வழிகாட்டல் வழங்கினர்.

அகரம்: மாலை நேர வகுப்புகளுக்குக் சென்றீர்களா?

*அம்னா:* பாடசாலையில் நடைபெறும் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வேன். அதிபர், ஆசிரியர்கள் இதற்கு உதவினர். மேலும் தரம் 4இல் கற்பித்த ஆசிரியை கூட அவரது வீட்டுக்கு அழைத்து எனக்கு வழிகாட்டினர். எனவே, அனைவரது பங்களிப்பும் இறைவனருளால் எனக்கு வெற்றியைத் தந்தது.

அகரம்: உங்களது பொழுது போக்கு என்ன?

*அம்னா:* எனது பொழுதுபோக்கு புத்தகங்களை வாசித்தல். அத்தோடு ஓய்வு நேரங்களில் தொலைக்காட்சியில் சிறுவர் நிகழ்ச்சிகளைப் பார்ப்பேன்; சிறிது நேரம் விளையாடுவன்.

அகரம்: உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?

*அம்னா:* இன்ஷா அல்லாஹ், நான் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்று விரும்புகிறேன்.




அப்புத்தளை முஸ்லிம் பாடசாலையைச் சேர்ந்த ஏ.சி. சித்தி அப்ஸா (158), எம்.எம். நுஸ்கி (151) எம்.ஏ.எப். அஸ்கியா (150) ஆகியோர் பாடசாலையின் அதிபர் ஏ.எம். அசார் மற்றும் வகுப்பாசிரியை எம்.வை. முஹர்ரம் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கற்றலில் ஞாபகமும் மறதியும் - 05

**சென்ற இதழ் தொடர்...**

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)



> **“ ஐவேளைத் தொழுகை, அல்குர்ஆன் ஓதுதல், நாளாந்த திக்ர் அவ்றாதுகளை ஓதுதல், இறை சிந்தனையுடன் இருத்தல் போன்ற அம்சங்கள் உள்ளத்தை ஒருமுகப்படுத்த துணை செய்கின்றன. போதியளவு தூக்கமும் ஓய்வும் ஞாபக மறதியைக் குறைக்க உதவுகிறது. போதைப்பொருள் பாவனையிலிருந்து தூரமாகி இருப்பதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும் நேசத்தையும் உதவியையும் பெற்று ஞாபக மறதியையும் தடுத்துக் கொள்ளலாம். ”**

எல்லாவகையிலும் மதுபானம் மற்றும் ஏனைய போதைப் பொருட்கள் உடல் மற்றும் உள நலத்துக்குக் கேடு என்பதை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.

6. மூளையில் ஏற்படும் அதிர்ச்சி அல்லது தாக்குதல்களினால் ஏற்படும் பிறழ்வு நிலை மற்றும் அம்னீஷியா நோய்.

மிகையாக நினைவு இழத்தல் அல்லது நினைவு அழிந்து போதல் ‘அம்னீஷியா’ எனப்படும். இந்நோய் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் காரணிகளை உடல்சார்பானது (Organic) மற்றும் உளச்சார்புடையது (Psychogenic) என இரு கூறுகளாக நோக்கலாம்.

**1. உடல் சார்புடையது** (Organic)

மூளைக் காயங்கள், நச்சுப் பொருட்களால் மூளையின் புறணிப் பகுதி பாதிப்படைதல் மற்றும் வயது முதிர்வின் காரணமாக ஹோமோன்கள் சுரப்பதில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற காரணங்களால் ஒருவருக்கு மறதி நோய் (அம்னீஷியா) எற்பட வாய்ப்புண்டு. பாரிய விபத்துக்குள்ளாகும்போது மூளையில் ஞாபகத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஹிப்போகம்பஸ் பாதிப்படைவதன் மூலமோ அல்லது உள்ளெடுக்கும் உணவுப் பொருட்கள் நஞ்சாவதன் மூலம் புதிய விடயங்க ளைக் கற்பதற்கு உதவும் மூளையின் புறணிப்பகுதி பாதிப்படைவதன் மூலமோ அம்னீஷியா நோய் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உளச் சார்புடையது (Psychogenic)

மூளைப் புறணி (Cortex) சேதமடையாமல் இருக்கும் நிலையில் மனவெழுச்சி அதிர்ச்சிகளால் நினைவு அழிக்கப்படுதல் 'உளம்சார் மறதி நோய்' எனப்படும். ஏதேனும் செறிவுமிக்க மனவெழுச்சி அனுபவங்கள் உளம்சார் மறதியை ஏற்படுத்துகிறது. விரும்பி நேசிக்கப்படும் ஒருவர் இறத்தல் அல்லது இழுத்தல், செல்வத்தை இழுத்தல், பயங்கரமான நிகழ்ச் சிகள் மற்றும் தலைகுனிவை ஏற்படுத்தும் நிகழ்ச்சி களால் பாதிக்கப்படல் போன்றன உளம் சார் மறதிக்குக் காரணமாக அமைகின்றன.

இவை தவிர மோசமான திரைக்காட்சிகள், அசிங் கமான மற்றும் ஆபாசமான தொடர் கலந்துரையா டல்கள் போன்ற வேறு பல விடயங்களும் ஞாபக மறதி ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம். தூங் குகின்ற காலத்தை விடவும் விழிப்பின்போது மறதி கூடுதலாக இருப்பதாக 1920களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வொன்று குறிப்பிடுகிறது. ஞாபக மறதியில் சாதாரண அனுசேபத் தொழிற் பாடு தாக்கம் செலுத்துவதே இதற்குக் காரணம் என இவ்வாய்வு மேலும் சுட்டிக் காட்டுகிறது.

மறதி அதிகமாக இருப்பது கற்றல் செயன் முறைக்கு உகந்ததல்ல. இதனால் கற்றல் மற்றும் மீட்டல் என்ப வற்றுக்கு பயிற்சி முறைகளும் விசேட உத்திகளும் அவசியமாகும். குறிப்பாக இடைவெளி விட்டுக் கற்றல், விடயங்களைப் புரிந்து கொண்டு பொருளுணர்ந்து கற்றல், மீண் டும் மீண்டும் கற்றல், இடையிடையே மதிப்பீடு செய்தல், பல்புலன் வழிக் கற்றல் (Multy Sensory Learning) ஆகிய முறைகள் சிறந்தன. இவற்றைவிட மனதை ஒருமுகப்படுத்தும் தியான முறைகள், உடற் பயிற்சிகள் என்பன பெரிதும் உதவுகின்றன.

ஐவேளைத் தொழுகை, அல்குர்ஆன் ஓதுதல், நாளாந்த திக்ர் அவ்றாதுகளை ஓதுதல், இறை சிந்த னையுடன் இருத்தல் போன்ற அம்சங்கள் உள்ளத்தை ஒருமுகப்படுத்த துணை செய்கின்றன. போதியளவு தூக்கமும் ஓய்வும் ஞாபக மறதியைக் குறைக்க உதவுகிறது. போதைப்பொருள் பாவனையிலி ருந்து தூரமாகி இருப்பதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும் நேசத்தையும் உதவியையும் பெற்று ஞாபக மறதியையும் தடுத்துக் கொள்ளலாம்.

மறதியை ஏற்படுத்தும் காரணிகளை அறிந்து அதற்கான பரிகாரங்களை மேற்கொள்வதன் மூல மும் ஏலவே கற்ற ஞாபக சக்தியை விருத்தி செய் வதற்கான உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலமும் நீங்கள் எதிர்நோக்கும் ஞாபக மறதி என்ற பிரச்சினையிலிருந்து விடுதலை பெற முயற்சியுங் கள். அல்லாஹ்வின் உதவியுடன் நீங்களும் வெற்றியாளர்களாக மாறலாம், இன்ஷா அல்லாஹ்.

(கணிதம் 10, 11) 23 ஆம் பக்க தொடர்

vii. $\Delta$ இல் $X\hat{S}R = X\hat{R}S$ (நிறுவல்)

∴ $XS = XR$ (இரு சமபக்க $\Delta$ தேற்றம்)

viii. $X\hat{S}R = P\hat{Q}R$ (வட்ட நாற்பக்கலின் புறக் கோணம் அகத்தெதிர் கோணத்திற்கு சமன்)

$X\hat{R}S = S\hat{P}Q$ (வட்ட நாற்பக்கலின் புறக் கோணம் அகத்தெதிர் கோணத்திற்கு சமன்)

ஆனால், $X\hat{S}R = X\hat{R}S$ (நிறுவல்)

∴ $P\hat{Q}R = S\hat{P}Q$

∴ $\Delta PQR$ இல் $\hat{P} = \hat{Q}$ ஆகையால் $XP = XQ$

$XP = XQ$ (நிறுவல்)

$XS = XR$ (நிறுவல்)

∴ $XP - XS = XQ - XR$

∴ $PS = QR$

3) i. $\hat{B} + \hat{D} = 180^0$ (வட்ட நாற்பக்கலின் எதிர் கோணங்கள்)

$\hat{D} = 65^0$

∴ $\hat{B} + 65^0 = 180^0$

∴ $\hat{B} = 180^0 - 65^0$

$A\hat{B}C = 115^0$

இதேபோல்

ii. $\hat{A} + \hat{C} = 180^0$

$2x + 3x = 180^0$

$5x = 180^0$

$x = 36^0$

4) i. $E\hat{F}D = A\hat{D}F = D\hat{A}C = A\hat{C}B = 30^0$ (ஒன்றுவிட்ட கோணங்கள்)

∴ $A\hat{C}B = 30^0$

ii. $\Delta ABC$ இல் $B\hat{A}C + A\hat{C}B$

$= 60 + 30^0$

$= 90^0$

∴ $\hat{B} = 90^0$

∴ AC விட்டம் (அரைவட்ட கோணம்)

iii. $A\hat{D}F = A\hat{C}B = 30^0$

∴ $AF = AB$ (பரிதியில் சமகோணங்களை அமைக்கும் நாண்கள் சமமானவை)

C,D களை இணைக்க

$A\hat{D}C = 90^0$ (அரை வட்டக் கோணம்)

$B\hat{A}C = 90^0$ (60 + 30)

$A\hat{B}C = 90^0$ (அரைவட்டக் கோணம்)

∴ $A\hat{C}D = 90^0$

∴ ABCD ஒரு செவ்வகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி போட்டுப் படிப்போம்; பிழைகளைத் திருத்துவோம்; ஊக்கப்படுத்துவோம்



சந்திப்பு: பா. சிகான்

**ரமேஸ் நிதூசிகா இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற (192) யாழ். புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை மாணவி. ரமேஸ் (உபஅதிபர்)- அருள்தா (ஆசிரியை) தம்பதியினரின் புதல்வி.**

***அகரம்: உங்கள் வீட்டிலும் பாடசாலையிலும் கற்பதற்கான வாய்ப்புக்கள் எப்படியிருந்தன?***

நிதூசிகா: எனது வீட்டில் என்னை ஊக்கப்படுத்தினார்கள். நன்றாகப் படிக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார்கள். இதனால் அதிக புள்ளிகளை எடுக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது.

***அகரம்: புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவீர்கள் என்று எதிர்பார்த்தீர்களா?***

நிதூஷிகா: நல்ல பெறுபேறு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் மாவட்ட மட்டத்தில் முதலிடம் கிடைக்குமென நினைக்கவில்லை.

***அகரம்: உங்கள் கற்றல் செயற்பாடுகளை எவ்வாறு அமைத்துக் கொண்டீர்கள்?***

நிதூஷிகா: நான் அதிகாலை 4-6 மணி வரை படிப்பேன். பின்னர் பாடசாலைக்குச் செல்வேன். பின்பு மாலை 6-10 மணி வரை படிப்பேன்.

***அகரம்: படிப்பவற்றை எவ்வாறு ஞாபகப்படுத்தி வைத்திருப்பீர்கள்?***

நிதூஷிகா: படிப்பவற்றை ஓய்வு நேரங்களில் மீட்டிப் பார்ப்பேன். அதில் ஏதும் தெளிவில்லையாயின் மீண்டும் பார்த்து சரிப்படுத்திக் கொள்வேன். அல்லது பெற்றோர், ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

***அகரம்: நீங்கள் உங்கள் ஓய்வு நேரங்களை எவ்வாறு அமைத்துக் கொண்டீர்கள்?***

நிதூஷிகா: ஓய்வு நேரங்களில் நிறைய புத்தகங்கள் வாசிப்பேன். குறிப்பாக எனது சித்தி வாசிகசாலையிலிருந்து எனக்கு தேவையான கதைப் புத்தகங்கள், பொது அறிவுப் புத்தகங்கள் என்பவற்றைக் கொண்டு வந்து தருவார்.

***அகரம்: தொடர்ந்தும் இதே பாடசாலையில் கற்க விரும்புகிறீர்களா?***

நிதூஷிகா: இல்லை, இது ஆரம்ப பாடசாலைதானே. இங்கு தரம் 5 வரைதான் உள்ளது. இதனால் எனது உயர்கல்வியை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் தொடரவுள்ளேன்.

***அகரம்: உங்களது பெறுபேறு சிறப்பாக அமைய காரணங்கள் எவையென நீங்கள் கருதுகின்றீர்கள்?***

நிதூஷிகா: நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்தான் காரணம். குறிப்பாகக் கூறினால் நண்பர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு படிப்பேன். ஆனால் ஏதும் பிழை என்றால் நாம் அதை சுட்டிக்காட்டி படிப்போம்; அடிக்கடி எம்மை ஊக்கப்படுத்தி கொள்வோம். இந்த நேரத்தில் எனக்கு கல்வி கற்றுத் தந்த ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

***அகரம்: உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?***

நிதூஷிகா: டொக்டராக வர வேண்டும்; எல்லோருக்கும் இலவசமாக வைத்தியம் செய்ய வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம்.

***அகரம்: இந்த இலட்சியம் உங்களுக்கு வரக் காரணம் என்ன?***

நிதூஷிகா: மக்கள் நிறையக் கஷ்டப்படுகிறார்கள்; அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இதுதான் இலட்சியம் வருவதற்கு காரணம்.

***அகரம்: எதிர்வரும் காலங்களில் புலமைப் பரிசில் எழுதவுள்ள உங்கள் தம்பி, தங்கைமார்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?***

நிதூஷிகா: நிறையப் படிக்க வேண்டும். படிக்கின்றவற்றை மனனமிட வேண்டும். ஓய்வு கிடைக்கும் வேளையில் சிறிது நேரம் விளையாட வேண்டும். மேலும் என்னை விட அதிகமாக படித்து அதிக புள்ளிகளைப் பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் ஆதி பிதா... (3ஆம் பக்க தொடர்)**

"பின்னர் கற்றுக் கொடுத்தவைகளை வானவர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து (மலக்குகளே பிரதிநிதி யொருவரை நியமித்தால் பூமியில் ஒழுங்கமைப்பு சீர்குலையும் எனும்) உங்கள் கருத்து உண்மைத் தன்மையுடையதெனில், இவற்றின் பெயர்களை கூறுங்களேன் எனக் கூறினான்." (அல்பகரா: 31)

"உடனே வானவர்கள் தம் எஜமானாகிய படைப்பாளன் அல்லாஹ்வின் முன் நிலையில் பணிந்து குறைகள் ஏதுமில்லா அதி தூயவன் நீயே! நீ எங்களுக்கு கற்றுத் தந்தவை தவிர வேறு எவ்வறிவும் எங்களிடம் கிடையாது. உண்மையில் நீ மட்டுமே பேரறிவும் மிக்க ஞானமும் உடையவன் என்று கூறினார்கள்."

(அல்பகரா: 32)

அப்போது நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நோக்கி ஆதமே! இவற்றின் பெயர்களை நீர் அவர்களுக்கு அறிவியும் என அல்லாஹ் கட்டளையிட்டான். நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து கற்றுக் கொண்டவைகளை மலக்குகளின் முன்னிலையில் சமர்ப்பித்தார்கள். இவ்வறிவின் பேறாக அல்லாஹ் மனிதனுக்கு உயர் மரியாதையளித்து கௌரவித்தான்.

அவ்வாறு அவர் அறிவித்ததும் வானங்களிலும் பூமியிலும் (உங்களுக்கு) மறைந்திருக்கக் கூடிய (உண்மைகள்) அனைத்தையும் நிச்சயமாக நான் நன்கறிவேன். மேலும் நீங்கள் வெளிப்படுத்துகின்றவைகளையும் மறைக்கக்கூடியவற்றையும் நான் நன்கறிவேன் என்று உங்களிடம் கூறவில்லையா? என அல்லாஹ் மலக்குகளை நோக்கி வினவினான்.

பின்னர் விண்ணுலகில் அதி உயர்ந்த கௌரவிப்பு மரியாதையை அல்லாஹ் ஆதம் நபியவர்களுக்கும் அவரது சந்ததியினருக்கும் வழங்கினான்.

"நீங்கள் ஆதமுக்கு சிரம் பணியுங்கள் என்று வானவர்களுக்கு நாம் கட்டளையிட்டபோது அவர்கள் எல்லாரும் பணிந்து (கௌரவித்தார்கள்) இப்லீஸைத் தவிர..." (அல்பகரா 31)

*(தொடரும்...)*

## அகரத்தின் வினா-விடைப் போட்டி-10

எம்.ஆர்.எம். நுஸ்கி,
வெலம்பொட

**வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான நூல்கள், இறுவட்டுக்கள் வழங்கப்படும்.**

(உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி, நவம்பர் 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி
அகரம்
வினா-விடைப் போட்டி
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

### வினாக்கள்

1. இடைவெளி இணைப்பு பாடநெறி என்றால் என்ன?
2. அல்பத்தானீ எழுதிய வானியல் அட்டவணைகள் பற்றிய நூல் எது?
3. தென்னாசிய கடற்கரை போட்டிகள் நடைபெற்ற திகதி எது?
4. ஸ்டீவ் ஜொப்ஸ் தன் வாழ்வில் பின்பற்றிய வாசகமெனக் குறிப்பிடுவது?
5. அப்பிள் கம்யூட்டர் எப்போது வடிவமைக்கப்பட்டது?
6. அமைதியடைந்த உள்ளத்தை அல்குர்ஆன் எவ்வாறு குறிப்பிடுகிறது?
7. தேநீர் தயாரித்தல் என்பதை அறபியில் தருக.
8. இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் தாயின் பெயர் என்ன?
9. 'அம்னீஷியா' என்றால் என்ன?
10. இலங்கையின் கல்வித்துறை அபிவிருத்திக்கு கூடியளவு நிதி உதவிகளை வழங்கும் நிறுவனம் எது?

### பரிசுக்குரியவர்கள்:

அரூஸியா ஹனீபா, கள்எலிய
எம்.எப்.எப். பஸீஹா, பனாப்பிட்டிய
ஏ.எஸ்.எம். ரஹீம், பன்னல
எம்.ஜே.ம். பஷீர் அஹமட், ஓட்டமாவடி
பீ.எம். இக்ராம், புத்தளம்
ஆர்.எம். றிப்தி, காஸிமிய்யா அ.க.
எம்.எப்.எம். சுமாக், சாய்ந்தமருது
எம்.ஐ. யாஸ்மின் இஸ்ஸத், நிலாவெளி
எம்.ஏ.எம். அகார், மருதமுனை
என்.என்.எப். சில்மியா, கெகுணகொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சரம்






கஃபதுல்லாஹ் ஆலய சரிதம்
கற்பனை கலவா நித்திய யதார்த்தம்
கண்ணீர் மல்கிட கதையாய் கூறும்
கண்ணியமிக்க திருநாளே வருக!

நெருப்பில் விழுந்து சோதனை பெற்று
நெறியுடன் வாழ்ந்த இப்றாஹிம் நபியின்
நேரிய வாழ்வைச் சுவையுடன் சொல்லும்
நன்நாள் உனக்கு மர்ஹபா! மர்ஹபா!

இஸ்மாஈல் நபியின் இணையற்ற வீரம்
இறைவனுக்காய் அவ்விருவரின் தியாகம்
தந்தையும் மகனையும் நினைவில் நிறுத்தி
தரணி வியக்க வரும் பொன்னாளே வருக!

அடிமைப் பெண்ணாம் அன்னை ஹாஜரா
அடக்கப்பட்ட புண்ணிய ஸ்தலமாம்
அற்புத 'ஸம் ஸம்' அருமையைச் சொல்லும்
அந்த நாள் உனக்கு அஹ்லன்! வஸஹ்லன்!

மஹ்ஷர் வெளியை மறைவாய்க் காட்டும்
மனிதர் கூட்டம் அரபா வெளியில்
சகோதர சமத்துவம் என்றும் நிலைக்க
சங்கைமிகு பெருநாளே வருக! வருக!

***யூ.எம்.எம். இம்தியாஸ்***
***தெஹிவளை***

## அமானிதம்

ஏய் ஜாஹிலிய்யப் பெண்ணே!
நவீன காலம் இதுதான் என்று
உன்னை மாற்றிக் கொள்கிறாய்
முக்காடிட்டால் மட்டும் போதும்
என நினைக்கின்றாய்
உன் மானத்தை காற்றில்
பறக்க விடுகின்றாய்
உனக்கு நீயே தீ மூட்டிக் கொள்கிறாய்
உன் மார்க்கத்தை புறக்கணிக்கின்றாய்

உன் செயல்களால்;
அமானிதமாகப் பேணவேண்டிய
உன் உடம்பை அஜ்னபிகள்
கவரும் வகையில்
மாற்றிக் கொண்டாயே
ஓ! ஜாஹிலிய்யப் பெண்ணே!
எப்போது நீ மாறப் போகிறாய்?

***அன்சிபா பின்த் அன்சார்***
***அல்ஹாதியா இஸ்லாமிய வளாகம்***
***குரிகொட்டுவ***

## எங்கள் மதரஸா

அழகிய தோழமை தந்தது
எங்கள் மதரஸா
அன்பான நேசம் தந்தது
எங்கள் மதரஸா

அதிகாலை தஹஜ்ஜுதுக்கு
அன்பாய் எழுப்புகிறது
அல்லாஹ்வின்
நெருக்கத்திற்கு
அழைத்துச் செல்கிறது

கலைகள் பலவற்றை எமக்கு
கனிவாய் கற்றுத் தருகிறது
ஆசானின் பெருமையை
உள்ளத்தில் அள்ளி
ஊற்றுகிறது

அறிவும் ஒழுக்கமுமே
எம்மில்
அது எதிர்பார்க்கிறது
எல்லோரும் சுவனம்
செல்வதே
அதன் இலக்காகிறது

வாருங்கள் நீங்களும்
எங்கள் மதரஸாவுக்கு
அழைத்திடுவோம்
அனைவரையும்
அழகிய சுவனத்திற்கு

***ஐ.எம். தாரிப்,***
***அல்மஜீதிய்யா அ.க, பொலன்னறுவ***

## அன்பு

உயிர் என்ற
மூன்றெழுத்தால்
உருவாகும் ஊற்று
அன்பு

பழக்க வழக்கம்
பண்பாட்டால்
பசுமையான
வாழ்வளிக்கும்
பண்பு

பாசம் என்னும்
உயர் மலையிலிருந்து
பொழிந்த நேசமழை!

பணத்தால்
பிரிக்க முடியாத
பித்து

***ஆர்.எப். சப்ரினா,***
***தரம்- 08 தி/ ஆயிஷா மகளிர் ம.வி, கந்தளாய்***



## கல்வி

கல்வி என்பது ஒரு கலை – அதுவே
எமது வாழ்வின் விலை – அது
எமது வாழ்க்கையை மாற்றிடும் நிலை
– அதை
தேடாமல் இருப்பது பிழை

கல்விக்கு நாம் செய்யும் பணி
–அதுவே
எமது வெற்றிக்கு கிடைக்கும் கனி
அதை நன்றாக உணர்ந்து நீ
உலகத்தில் சரித்திரம் படைத்திடு

***எம்.எச்.எப். நிஸ்பா ஹுஸைன்***
***மத்ரஸதுல் ஹமீதியா,***
***வெலம்பொட***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்பத்தானீ (Al-battani)



**ஐரோப்பாவின்** வானியல் ஆசிரியர்களாக இருவர் கருதப்படுகிறார்கள். ஒருவர், அல்பத்தானி; மற்றவர், பர்ஙானி. இவர்களுள் பத்தானி குறிப்பிட்டுக் கூறக்கூடிய தலைசிறந்த வானியலாளர் ஆவார். இவர் மெஸபதேமியாவில் உள்ள ஹர்ரான் என்னும் இடத்தில் ஹி. 244 (858)ல் பிறந்தார். முஹம்மத் பின் ஜாபிர் பின் ஸினான் அல்பத்தானீ என்பது இவருடைய முழுப் பெயர். அபூ அப்துல்லாஹ் என்பது இவரது மறுபெயராகும்.

இவர் வானியலிலும் திரிகோண கணிதத்திலும் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார். சிறிது காலம் சிரியாவின் ஆளுநராகக் கூட கடமையாற்றினார். இவர் யூபிரடிஸ் நதிக்கரையில் உள்ள ரக்கா எனும் ஊரில் வாழ்ந்தார். அங்கு வானோக்கு நிலையத்தை அமைத்து வானியல் அவதானங்களை மேற்கொண்டார். அவற்றின் விளைவாக இவர் பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்.

இவர் மேற்கொண்ட ஆய்வுகள், அது வரை காலமும் சரியானவை என ஏற்றுக் கொள்ளப்பட்ட தொலமியின் சில முடிவுகளைக் கூட மாற்றியமைத்தன. இவர் தமது வானியல் அவதானங்களில் அஸ்துர்லாப், குழாய்கள், பன்னிரண்டாண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த நிழல் மூலம் காலம் காட்டும் தட்டு, ஐந்து வளையங்களைக் கொண்ட வான்கோளம், கிடை மற்றும் நிலைக்குத்தான சூரிய கால் வட்டங்கள் முதலான உபகரணங்களைப் பயன்படுத்தினார்.

இவர், ஒரு வருடம் 365 நாட்கள்; 5 மணித்தியாலங்கள்; 46 நிமிடங்கள்; 24 வினாடிகள் கொண்டதென நிறுவினார். பருவ காலங்களின் நீளத்தைக் கொண்டு ஞாயிற்றுச் சேய்மையின் ஒரு நெட்டாங்கு 82 பாகை 17 கலை என்று கணித்தார். இவரது ஞாயிற்றுச் சேய்மைக் கணிப்பு தொலமியின் கணிப்பை விடவும் 16 பாகை 47 கலை கூடியது.

> விண்மீன்களைப் பற்றிய விஞ்ஞானம் சமயத்திற்கு அடுத்தது; அறிவியல் துறைகளுள் மகோன்னதமும் பூரணத்துவமும் வாய்ந்தது. அது உள்ளத்தை அணி செய்கிறது; அறிவைக் கூர்மையாக்குகிறது. இறைவனின் ஏகத்துவத்தையும் அவனுடைய உயர்ந்த அறிவு, ஆற்றல் ஆகியவற்றையும் உணர்ந்தறிய காரணமாக இருக்கிறது.

தலைப்பிறை தெரியும் நேரத்தைத் தீர்மானிக்கப் புதிய முறை ஒன்றையும் இவர் கண்டுபிடித்தார். சந்திர, சூரிய கிரகணங்களைப் பற்றியும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். இவரது ஆய்வுகள் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் டன்தோர்ன் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட சந்திர இயக்கத்தின் படிப்படியான மாற்றத்தைத் துணியும் அவரது முயற்சியில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

தலைப்பிறையின் தோற்றம், கிரகணியின் சாய்வு, அயன, உடு ஆண்டுகளின் நீளம், சந்திரச் சீரிலிகள், கிரகணங்கள் முதலியவற்றோடு தொடர்பான இவரது கணிப்புக்கள் அல்குவாரிஸ்மீயின் கணிப்புக்களை விடவும் மிக செம்மையானவையாக இருந்தன.

உலகில் நிகழும் சம்பவங்களுக்கு விண்மீன்களின் செல்வாக்கே காரணம் என இவர் குறிப்பிட்டுள்ளார். தொலமியின் டெக்ட்ராபிப்ளோஸ் Tectrabiblos என்னும் நூலுக்கு விரிவுரை எழுதிய இவர் வானியல் சம்பந்தமாகச் சில நூல்களையும் எழுதினார்.

'ஷீஜுல் ஸாபீ' (ஸாபிசுய அட்டவணைகள்) என்னும் வானியல் அட்டவணைகள் நூல் இவருக்கு புகழை ஈட்டிக் கொடுத்தது. பல அட்டவணைகளைக் கொண்ட இந்த நூலில் ஹி. 267-68 (880-81) ஆம் ஆண்டுக்குரிய நிலையான விண்மீன்களின் பட்டியலும் தரப்பட்டிருக்கிறது.

(44ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்,
ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை, புத்தளம்

**சரியான விடைக்குக் கோடிடுக**

1. i. நாயும் குமரனும் ஓடின.
   ii. நாயும் குமரனும் ஓடினார்கள்.
   iii. நாயும் குமரனும் ஓடியது.

2. i. தேநீரை விட இளநீர் சுவையானது என்றாள் பாத்திமா.
   ii. தேனீரை விட இளனீர் சுவையானது என்றாள் பாத்திமா.
   iii. தேநீரை விட இளநீர் சுவையானது என்றாள் பாத்திமா.


3. i. எனது மாமாவின் மகன் (மச்சான்) சிறந்த பாடகன்.
   ii. எனது மாமாவின் மகன் (மருமகன்) சிறந்த பாடகன்.
   iii. எனது மாமாவின் மகன் (அண்ணா) சிறந்த பாடகன்.



4. i. வைத்தியசாலையில் நோயாளியை வைத்து பராமரிப்பவர் வைத்தியர்.
   ii. வைத்தியசாலையில் நோயாளியை வைத்து பராமரிப்பவர் மருத்துவர்.
   iii. வைத்தியசாலையில் நோயாளியை வைத்து பராமரிப்பவர் தாதி.

5. i. தென்னை மாவை ஒத்தது.
   ii. தென்னை பனையை ஒத்தது.
   iii. பனை வாகையை ஒத்தது.

**பிழையான படத்தின் குறியீட்டை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

6.
 i.
 ii.
 iii.

7.
 i.
 ii.
 iii.

8.
 i.
 ii.
 iii.

**பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

9. கிரவா ..................................................

10. கலுலேல்ல ..............................................

**பின்வரும் சொற்களை ஒழுங்கமைக்குக.**

11. லை-நே-கு-மா-ர-பு-வ-ப்.................................

12. டி-ம-ட-ம்-ட்-அ .........................................

**பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

13. Number ..................................................

14. Milk ......................................................

முதலில் தரப்பட்டுள்ள எண் கூட்டினுள் உள்ள எண் பெறுமானத்திற்குப் பிரதியீடு செய்யத்தக்க எண் கூட்டை தரப்பட்டுள்ள எண் கூடுகளில் இருந்து தெரிவு செய்க.





15.


| | i. | ii. | iii. |
|---|---|---|---|
| 4 x 8 | 2 x 4 x 4 | 2 x 3 x 4 | 3 x 4 x 2 |

16.

| | i. | ii. | iii. |
|---|---|---|---|
| 13+12+16 | 16+12+10 | 23+13+5 | 15+14+23 |

**வித்தியாசமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.**

17.
 i.
 ii.
 iii.
 iv.

18.
 i.
 ii.
 iii.
 iv.

19.
 i.
 ii.
 iii.
 iv.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கமைத்து ஒழுங்குப் பிரகாரம் இலக்கமிடுக.

i. சமையலுக்குத் தேவையான பொருட்களை வாங்கினாள். (....)

ii. தனது கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உணவை சந்தோஷமாக பரிமாறினாள். (....)

iii. மத்தியானமானதும் உணவு மேசைக்கு கொண்டுவரப்பட்டது. (....)

iv. தாய் மளிகைக் கடைக்குச் சென்றாள். (....)

v. வீட்டுக்குத் திரும்பியவள் சமையலறையில் படுவேகமாக சமைப்பதில் ஈடுபட்டாள். (.....)

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

21. கடலில் எப்பொழுதும் இருப்பது?
i. மீன் ii. நீர் iii. கப்பல்

22. ஒரு பிள்ளைக்கு வருடந்தோறும் கூடுவது
i. வயது ii. பெயர் iii. வீடு

23. எமது முகத்தை உள்ளபடி காட்டுவது
i. நிழல் ii. கண்ணாடி iii. மனம்

**கீழே உள்ள உருவை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.**

24. 
i. விளையாட்டு, மகிழ்ச்சி
ii. விளையாட்டு, பாடசாலை
iii. உடற்பயிற்சி, பணம்

25. 
i. பணம், அழகு
ii. வீடு, மகிழ்ச்சி
iii. அழகு, மகிழ்ச்சி

**கீழ்வரும் கோல அமைப்புக்கு ஏற்ப வெற்றுக் கூட்டுக்கு வர வேண்டிய பொருத்தமான ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.**

26.
DEFG → FGDE → LMNO → [    ]

i. MNOL ii. LNOM iii. NOLM

**பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்தை எழுதுக.**

27. மாலை .........................................................

28. ஒளி .........................................................

**இறந்தகால வாக்கியங்களாக மாற்றுக.**

29. ரதி பாய்மரக் கப்பலை பார்த்த வண்ணம் நிற்பாள்.

30. மான்கள் துள்ளிப் பாய்ந்து செல்லும்.

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

31. இரவில் மலரும் பூ எது?
i. மல்லிகை ii. செவ்வரத்தை iii. தாமரை


32. பூக்காத தாவரம் எது?
i. தென்னை ii. பனை iii. குரோட்டன்


33. வாசம் இல்லாத பூ எது?
i. மல்லிகை ii. காகிதப்பூ iii. முல்லைப்பூ


34. உணவுக்கு பயன்படுத்தும் பூ
i. அகத்தி ii. மாதுளை iii. வாழை


35. மேசன் பயன்படுத்தும் உபகரணம்
i. குறடு ii. சீவுளி iii. சாந்தகப்பை

**படத்தில் காட்டப்பட்டுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான படத்தை தெரிவு செய்க.**






i. ii. iii.

37.




i. ii. iii.


**தரவுகளை அவதானித்து பின் பெறுமானங்களைக் காண்க.**




38. ○ இன் பெறுமதி......

39. □ இன் பெறுமதி.....

**எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

40.


(............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் II**

**நேரம் 1 மணி 15 நிமிடம்**

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

**கட்டத்திற்குள் உள்ள எழுத்துக்களை வைத்து விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி | ச | த் | தி | ய | ம் |
| த | ன் | கு | கா | க | ம் |
| ம | டி | ஐ | மு | டி | கி |
| க | ம | லை | ப் | பூ | ளி |
| டு | கு | டை | த | ப | த் |
| கு | ற | ழி | ஞ் | தி | சி |


1. மாதங்களில் ஒன்று ..............................
2. ஆகாயத் தொட்டி என்று இதை அழைப்பர் ..............................
3. இது சிறியதென்றாலும் காரம் பெரிது என்பர் ..............................
4. உண்மை என்றும் கூறலாம் ..............................
5. குன்று என்பதன் எதிர்ப்பதம் ..............................

**சரியான விடைக்குக் கோடிடுக.**

6. பேசும் பறவை
   i. வாத்து ii. குருவி iii. கிளி
7. வீட்டுக்கு வெளியே மட்டும் வாழும் விலங்கு
   i. நாய் ii. ஆடு iii. பூனை
8. ஒரு பூரணமான உணவு
   i. சோறு ii. பால் iii. பருப்பு
9. உயர்திணை பன்மைச் சொல்
   i. கடவுள் ii. விவசாயி iii. விஞ்ஞானிகள்
10. இறந்தகால ஒருமைச் சொல்
   i. வந்தாய் ii. ஓடினோம் iii. பாடுகிறீர்கள்


**முதல் படத்திற்கு பொருத்தமான படத்தை தெரிந்து அதன் குறியீட்டை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11.




A. B. C. .........

12.



A. B. C. .........

13.



A. B. C. .........

**பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

14. பத் தென்ன ..............................
15. துவன்ன ..............................

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.**

16. சுத்தமான-நாம்-பருக-நீரையே-வேண்டும்
17. மதித்து-மூத்தோரை-பழக்கமாகும்-நடத்தல்-நல்ல

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

18. சிறிய இலைகளைக் கொண்ட தாவரங்கள் யாவை?
   i. முருங்கை இலை, விளா இலை
   ii. வாகை இலை, தாமரை இலை
   ii. பலா இலை, மரவள்ளி இலை
   iv. தேக்கு இலை, ஈரப்பலா இலை
19. பிரிவுகள் காணப்படும் இலைகள் யாவை?
   i. பாகல், பலா ii. பாகல், மரவள்ளி
   iii. பலா, மரவள்ளி iv. கத்தரி, மிளகாய்
20. பந்தலில் படரும் கொடி எது?
   i. வல்லாரை ii. பூசணி
   iii. புடோல் iv. வற்றாளை
21. பூத்துக் காய்க்காத தாவரம் எது?
   i. மல்லிகை ii. தாமரை iii. வாழை iv. பலா
22. உணவு தயாரிக்கப் பயன்படும் வித்து.
   i. கோப்பி ii. நெல்
   iii. தேயிலை iv. கொக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. பானம் தயாரிக்கப் பயன்படும் வித்து.

i. தேயிலை ii. கோப்பி iii. பயறு iv. சோளம்

24. தனது வாயால் கௌவிக் கொள்வதன் மூலம் தனது குட்டிகளை பாதுகாக்கும் பிராணி எது?

i. முயல் ii. மாடு iii. ஆடு iv. யானை


25. விசித்திரமான கூட்டை அமைக்கும் பறவை எது?


i. தூக்கணாங்குருவி ii. காகம்
iii. மயில் iv. குயில்

26. அடைகாக்கப்பட்ட கோழி முட்டைகள் எத்தனை நாட்களில் குஞ்சு பொறிக்கும்?

i. 20 நாட்களில் ii. 15 நாட்களில்
iii 21 நாட்களில் iv. 30 நாட்களில்


**பின்வரும் பிராணிகளின் பெயரை எழுதுக.**





27. ................ 28. ................ 29. ................


**30. சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரம் எது?**



A B C D


**வித்தியாசமான உருவின் கீழ் கீறிடுக.**

31.



A B C D

32.



A B C D

**எண் கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்களை எழுதுக.**

33. 1096, 1097, 1098, .........., ..........

34. 1990, 1994, 1998, .........., ..........

35. 5 மாம்பழங்களின் விலை ரூபா 60.00ஆகும். 24 ரூபாவிற்கு எத்தனை மாம்பழங்கள் வாங்கலாம்?

i. 3 மாம்பழங்கள் ii. 2 மாம்பழங்கள்
iii. 4 மாம்பழங்கள் iv. 10 மாம்பழங்கள்

36. மூன்று பேனைகளின் விலை ரூபா 36.00 ஆகும். இரண்டு பேனைகளின் விலை யாது?

i. ரூபா 12 ii. ரூபா 24
iii. ரூபா 36 iv. ரூபா 20

37. 315 மாம்பழங்களை மூன்று கூடைகளில் சமமாகப் பங்கிட்டால் ஒரு கூடையில் இருக்கும் மாம்பழங்கள்.

i. 15 மாம்பழங்கள் ii. 51 மாம்பழங்கள்
iii. 105 மாம்பழங்கள்

38. வருடத்தில் 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?

i. 6 ii. 7 iii. 5 iv. 8

39. நாளை சனிக்கிழமை. நேற்றைக்கு முந்திய நாள் என்ன நாள்?

i. திங்கள் ii. புதன் iii. வெள்ளி iv. ஞாயிறு

**பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

40. தூக்கணாங்குருவியின் கூடு அழகானதாகும். ( )

41. குளிருக்கு கம்பளி ஆடை உகந்தது. ( )

42. ஓர் காட்டில் ஒரு சிங்கம் வாழ்ந்தது என்ற வசனம் சரியானதாகும். ( )

43. இதரை என்பது வாழையின் ஓர் இனமாகும். ( )

44. கோடை காலம் அதிகம் உஷ்ணம் நிறைந்த காலமாகும். ( )

அன்று பாடசாலை விட்டு செல்லும் போது அடைமழை பொழிந்தது. இதனைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

45. ..........................................................................

46. ..........................................................................

47. ..........................................................................

48. ..........................................................................

49. ..........................................................................

50. ..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாப்பத்திரம் i

1. ii
2. i
3. i
4. iii
5. ii
6. i
7. iii
8. i
9. கிளி
10. கரும்பலகை
11. மாலை நேர வகுப்பு
12. அடிமட்டம்
13. இலக்கம்
14. பால்
15. i
16. ii
17. iii
18. iii
19. iv
20. ii, v, iv, i, iii
21. ii
22. i
23. ii
24. i
25. iii
26. iii
27. காலை
28. இருள்
29. நின்றாள்
30. சென்றன
31. i
32. iii
33. ii
34. iii
35. iii
36. iii
37. iii
38. ◯ இன் பெறுமதி 10
39. □ இன் பெறுமதி 2
40. 27

## வினாப்பத்திரம் ii

1. ஐப்பசி
2. காகம்
3. கடுகு
4. சத்தியம்
5. குழி
6. iii
7. ii
8. ii
9. iii
10. i
11. B
12. C
13. B
14. சோறு தா
15. ஓடு
16. நாம் சுத்தமான நீரையே பருக வேண்டும்.
17. மூத்தோரை மதித்து நடத்தல் நல்ல பழக்கமாகும்.
18. i
19. iii
20. iii
21. i
22. ii
23. ii
24. i
25. i
26. iii
27. வெட்டுக்கிளி
28. கரப்பான் பூச்சி
29. சிலந்தி
30. C
31. D
32. C
33. 1099, 1100
34. 2002, 2006
35. ii
36. ii
37. iii
38. ii
39. ii
40. சரி
41. சரி
42. பிழை
43. சரி
44. சரி

(ஹஜ் கிரியைகள் 4ஆம் பக்க தொடர்)

சிறுபிள்ளையான இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், தன்னை அறுத்துப் பலியிடுமாறு தந்தைக்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்ற செய்தியை அறிந்ததும் அவர்கள் சற்றும் பின்வாங்காது இறைகட்டளையை நிறைவேற்ற முன்வந்தார்கள். இவர்களது தியாகமும் இவர்கள் மேற்கொண்ட பொறுமையும் அல்லாஹ்விடத்தில் மிகவும் மதிப்புமிக்கதாகக் காணப்பட்டதனால் அதனை அல்லாஹ் ஏற்றுக்கொண்டு உலகம் அழியும் வரை அவர்களை மனிதர்கள் நினைவு கூருமளவுக்கு சங்கைப்படுத்தினான்.

இன்று ஹஜ்ஜின்போது மேற்கொள்ளப்படுகின்ற கிரியைகள் அனைத்தும் இவ்வரலாற்றுப் படிப்பினைகளை எமக்கு ஞாபகமூட்டக் கூடியனவாகவும் ஈமானை ஒரு கணம் தூசு தட்டக்கூடியதாகவும் இருப்பதால் நாமும் அந்தப் புனித இடங்களுக்குச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றக் கூடிய பாக்கியத்தைப் பெற்று சுவர்க்கத்தின் சொந்தங்களாக மாற அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

சிறுவர்களாக இருக்கின்ற நாம் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்), இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் அவர்களது குடும்பத்தவர்களது வாழ்விலிருந்து பாடங்களை புரட்டிப் படிப்போம். அவர்களது கொள்கைப் பற்றும் பொறுமையும் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக செய்த தியாகமும் எம்மிடமும் வரவழைத்துக் கொள்ள வேண்டிய வாழ்வியல் முன்மாதிரிகள் ஆகும்.

(அல்பத்தானி 39ஆம் பக்க தொடர்....)

இத்தாலிய அறிஞரான சீ.ஏ. நல்லினோ என்பார் இந்த நூலை மிகக் கவனமாக ஆராய்ச்சி செய்து, மூன்று பாகங்களில் ஒரு பெருநூலே எழுதியிருக்கிறார். அதன் முதலாவது பாகத்தில் இந்த நூலின் அறபு மூலம் தரப்பட்டிருக்கிறது. இரண்டாம், மூன்றாம் பாகங்கள் இதன் இலத்தீன் மொழிபெயர்ப்பையும் குறிப்புக்கள், விளக்கங்கள், கலைச் சொற்கள் அகராதி ஆகியவற்றையும் கொண்டிருக்கின்றன. இவரது வானியற் கண்டுபிடிப்புக்களைக் கவனமாக ஆராய்ந்த அல் பிரூனி இவரது வானியல் அட்டவணைகளைப் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதினார்.

அல்பத்தானி ஹி. 317 (929)இல் பக்தாதிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, திக்ரீத் என்னும் பண்டைய நகருக்கு அண்மையில் உள்ள அல்ஹழ்ர் எனும் இடத்தில் மரணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்அஸ்ஹர் மகா வித்தியாலயம் (நவோத்ய பாடசாலை) ஹெம்மாதகம
## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்
## சித்தியடைந்தோர் – 2011


எம்.எம்.எப். நிஹ்லா
(170)


எம்.என். அப்துல்லாஹ்
(169)


எம்.ஆர்.எப். ஸம்ஹா
(167)


எம்.எம்.என். நஸ்மா
(164)


எம்.எஸ். ஷிராப் அஹ்மட்
(163)


எம்.எல்.எப். ஸஹ்லா
(162)


எம். ஆர். சுமையா
(161)


எம்.என்.எம். நஸ்பான்
(160)


எம்.இஸட். அம்ரி அஹ்மட்
(158)


எம்.ஆர்.எம். றிஸ்னி
(157)


எம்.எஸ். ஆஇஷா
(156)


என்.எம்.என். நவ்ரான்
(156)


எம்.ஏ. அஸ்ரான்
(155)


எம்.என். லம்யா
(155)


எம்.எஸ்.எம். ராஷித் (172)
பாணகமுவ அந் நூர் ம.க
எம்.ஏ.எப். பைரோசா–
ஏ.ஆர்.எம். ஷாகிர்


எம்.எஸ். சம்ஹா (153)
பதுார்தீன் மஹ்மூத் ம.பா
கண்டி
எம்.ஐ. சிப்லி–எப்.றிஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at: IPC Printing Press, 23 De Vass Lane, Grandpass, Colombo 14, Sri Lanka.

# The Trend




**Local:**
Single copy: LKR 100.00/-
Annual Subscription: LKR 1400.00/-
6 Months Subscription: LKR 700.00/-

**International:**
India, Pakistan, Maldives, Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand, Australia, Malaysia, Japan, Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

*Contact Hilal at +94 777 849 169*

*Every month at your doorstep ...*

*with an assortment of fascinating stuff for the youth, the family, women and children. Presenting ideas & views and interpreting events and developments from a moderately balanced perspective.*

#77, Demetagoda Road, Colombo-00900, Sri Lanka.
trendsmonthly@gmail.com | Tel: +94 777 849 169 | +94 11 2689324 | Fax: 2686030
www.facebook.com/thetrendjmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org